வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk    மலர் : 04    31.12.2022 சனிக்கிழமை    இதழ் : 22    பக்கங்கள் : 16

## புலிகளை மீளுருவாக்குவதற்கு பாகிஸ்தானும் சீனாவும் உதவி?

### தீவிர விசாரணையில் இந்தியா!

சென்னை, டிசெ. 31

பாகிஸ்தானின் உளவு அமைப்பான இன்ரர் - சேர்விஸ் இன்ரலிஜன்ஸ் (ஐ. எஸ். ஐ) தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளவும் செயல்பட வைக்க முயற்சிக்கிறது. இதேசமயம், இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள சீனா, தென்னிந்தியாவில் தனது ஆதிக்கத்தை மேம்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளின் தளத்தை மேம்படுத்த உதவ விரும்புகிறது.

இந்த இரு விடயங்கள் குறித்தும் இந்தியாவின் தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ) விசாரணைகளை

15

## ரயில் பாதை திருத்த பணி ஜன. 5இல் தொடங்குகிறது!

கொழும்பு, டிசெ. 31

அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான வடக்குக்கான புகையிரதப் பாதையின் திருத்தப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றின் மூலம் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி முதல் திருத்தப் பணிகள் ஆரம்பமாகும் என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேசமயம், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கவும், வடக்கு மாகாணத்துக்குள் உள்ளூர் ரயில் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டது.

# யாழ். மாநகர சபையை சிக்கலில் தள்ளி பதவி துறந்தார் மேயர் மணிவண்ணன்!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் இன்று சனிக்கிழமை முதல் தனது பதவியிலிருந்து விலகுகிறார் என்று உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

வருடத்தின் இறுதி நாளான இன்று வி. மணிவண்ணன் பதவி விலகுகின்றமையால், புதிய முதல்வர் ஜனவரியிலேயே - புதிய ஆண்டிலேயே பதவியேற்பார்.

இதனால், அவர் பதவியேற்றாலும் வரவு - செலவு திட்டத்தை சபைக்கு சமர்ப்பிக்க முடியாது. இதனால், அவர் அனைத்து வரவு - செலவுகளையும் முடிவுகளையும் சபையின் அனுமதியை பெற்றே செயல்பட முடியும். இது யாழ். மாநகரின் ஆட்சியில் குழப்பமான - நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தும் என்று

15

## டான் தொலைக்காட்சி வழங்கும்
## 'சாதனை தமிழன்' விருது பெறுகிறார் வரலாற்று பேராசிரியர் பத்மநாதன்!



யாழ்ப்பாணம், டிசெ. 31

டான் தொலைக்காட்சி குழுமம் வருடாந்தம் வழங்கும் சாதனை தமிழன் விருது இந்த ஆண்டு யாழ். பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்று பேராசிரியருமான சி. பத்மநாதனுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் பிரபலமான தொலைக்காட்சியான டான் தொலைக் காட்சி குழுமம் ஒவ்வொரு வருட நிறைவிலும் 'டிசெம்பர் 31 இன்னிசை இரவு' எனும் இசை

15

## ஒத்திவைத்த பாராளுமன்றை ஜன. 5ஆம் திகதி கூட்ட முடிவு!

கொழும்பு, டிசெ. 31

எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றத்தை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி கூட்டுவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கூட்டத்தின் போது ஜனவரி 5 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு நடைபெறும் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை பாராளுமன்ற விடுமுறைக் காலம் நீடிக்கப்படுவதை கருத்தில்கொண்டு, 5 ஆம் திகதியே பாராளுமன்ற அமர்வை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

புனர்வாழ்வு

15

## கொரோனா தொற்றாளர்கள் நாட்டில் அதிகரிக்கின்றனர்!

### சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 31

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொதுமக்கள் சுகாதார விதிகளை பின்பற்றுவது அவசியமானது என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் 40 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, அதிக நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்குள் நுழைபவர்களை சோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## அரச ஊழியர் 4,000 ரூபாயே முற்பணமாக பெற முடியும்!

கொழும்பு, டிசெ. 31

2023ஆம் ஆண்டு அரச உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்சமாக நான்காயிரம் ரூபாய்க்கு உட்பட்டு முற்பணம் வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் அனைத்து அமைச்சகங்கள், உள்ளூராட்சி மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு கூறியுள்ளது. மேலும், முற்பணம் 01.01.2023 அன்று தொடங்கி 28.02.2023 அன்று முடிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், 28.02. 2023ஆம் திகதிக்கு பிறகு பணம் செலுத்தக் கூடாது என்றும், 2023ஆம் ஆண்டுக்குள் இந்த முற்பணம் முழுமையாக அறவிடப்பட வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## வரிகள் நீக்கப்பட்டாலும் விலை குறையவில்லை!

கொழும்பு, டிசெ. 31

விடாய்கால அணையாடை (sanitary napkin) உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட அனைத்து வரிகளையும் அரசாங்கம் நீக்கியது. ஆனாலும், இவற்றின் விலைகள் இதுவரை குறைக்கப்படவில்லை.

இது தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகளிர் விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மூலப்பொருள் விலை உயர்வுக்கு முன்னும், வரிக்கு முன்னும் ஆறு விடாய்கால அணையாடைகள் அடங்கிய ஒரு பைக்கெற்

15

## பதில் அரச அதிபராக பிரதீபன் நியமனம்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த மருதலிங்கம் பிரதீபன் யாழ். மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமையுடன் யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த

15

## புதிய கட்சிகளை சேர்ப்பதில்லை என்று தமிழரசுக் கட்சி முடிவு எடுக்கவில்லை!

### சுமந்திரன் கூறுவது தவறு என்கிறார் தவராசா!

கொழும்பு, டிசெ. 31

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கை தமிழரசு கட்சி தனது பாரம்பரிய கூட்டாளிகளுக்கு மேலதிகமாக மற்ற தமிழ் கட்சிகளை சேர்த்துப் பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்கும் கோரிக்கையை தமிழரசு கட்சியின் அரசியல் குழு நிராகரித்து என்று சுமந்திரன் எம். பி. கூறியது தவறானது என்று தமிழரசு கட்சியின் கொழும்புக் கிளை தலைவரும் அரசியல் குழு உறுப்பினருமான கே.வி.தவராசா கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து அவர் விளக்கமளிக்கையில்,

"அவ்வாறான ஒரு தீர்மானம்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் அண்மையில் விக்னேஸ்வரனின் இல்லத்தில் கூடி, எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கூட்டணியாக போட்டியிடுவ தென்று முடிவெடுத்த பின்னர், இந்தப் பத்தியில் நாம் குறிப்பிட்டதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழரசு கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா வழக்கம்போல அந்தக் கூட் டத்தில் எடுக்கப்பட்ட முடிவை வரவேற்றிருந்தாலும், கட்சி யினருடன் பேசி முடிவைச் சொல்வதாகக் கூறிச் சென்றிருந் தார்.

ஆனால், கட்சியின் தலைவராக கலந்துகொள்கின்ற 'தில்' மாத்திரம் அவருக்கு இருந்தால் போதாது. அவர் உண்மை யில் அதனை விரும்பியிருந்தால், தனது கட்சிக்குள்ளும் அதற்காகப் போராடியிருக்கவேண்டும்.

அதுதான் இல்லை என்றாலும் கட்சியின் முடிவை அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர் என்ற வகையில் அதில் கலந்துகொண்டவர்களுக்கு அவரே உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்க வேண்டும்.

ஆனால், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு முடிவெடுத்த தாக கூட்டமைப்பின் பேச்சாளர் என்று அறியப்பட்ட சுமந்தி ரன் எம். பி. தகவல் தெரிவித்து மற்றவர்கள் அறியவேண்டிய நிலைமை.

இதுதான் தமிழரசின் தலைவரின் ஆளுமை. இதனால் தான் அதனை முன்னரே தெரிந்து கொண்டு இப்படித்தான் நடக்கும் என்பதை ஊர்க்குருவி முன்னரே ஊகித்திருந்தது.

இந்த இலட்சணத்தில்தான், அவர் தலைமையிலேயே புதிய கூட்டணி உருவாக வேண்டும் என்ற தனது விருப் பத்தை விக்னேஸ்வரன் வெளியிட ரெலோவும் அதனை வழி மொழிந்திருந்தது.

கூட்டமைப்பில் தற்போது உள்ள புளொட், ரெலோ தவிர்ந்த வேறு எந்தக் கட்சியுடனும் தமிழரசு கூட்டணி அமைக்கப் போவதில்லை என்று தமிழரசு மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியதாகவே சுமந்திரன் அறிவித்திருக்கிற ார். ஆனால், தாங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலேயே இப்போதும் இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கும் ஜனநாய கப் போராளிகள் கட்சியின் நிலை என்ன என்பதும் இதுவரை தெரியவில்லை.

ஆனால், புளொட்டும் ரெலோவும் மாத்திரமே கூட்ட மைப்பில் தொடர்கின்றன என்று அறிவிக்கப்பட்ட அதே வேளையில் தமிழரசுக் கட்சி மற்றுமொரு விளம்பரத்தை செய்திருப்பதையும் காணமுடிந்தது.

தமிழரசு கட்சியின் கிளிநொச்சி கிளை ஒரு பகிரங்க அறி விப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதாவது, நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில், கிளிநொச்சி மாவட் டத்திலுள்ள மூன்று பிரதேச சபைகளிலும் தமிழரசின் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் அது.

அதில் ஒரு விடயம் சுவாரஷ்யமானது. இந்த மூன்று சபைகளிலும் கூட்டமைப்பு போட்டியிட இருக்கின்றது. அப்படியெனில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற மூன்று கட்சிகளின் சார்பிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பிவிடக்கூடாது. கூட்டமைப்பு என்பது மூன்று கட்சிகளைக் கொண்ட கூட்டணி என்றா லும், அது கிளிநொச்சி மாவட்டத்துக்கு வெளியேதான். அங்கு தமிழரசு அல்லது சிறீதரன் மட்டுமே முடிவெடுக்கின்ற விவகாரம். அங்கெல்லாம் பங்காளிக்கட்சிகள் போட்டியிடுவ தென்றால் தனித்து அல்லது சுயேச்சையாகப் போட்டியிட வேண்டியதுதான்.

இதனை சிறீதரன் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக சொல்லிவிட்டார் என்று அறியமுடிந்தது.

அதிகம் ஏன், தமிழரசின் தலைவர் மாவை தனக்கு வேண் டிய கட்சிக்காரர் ஒருவருக்கு 'சீற்' கொடுக்க வேண்டுமானா லும் சிறீதரன் விரும்பினால் மாத்திரமே அதனை செய்யமுடி யும். அதுதான் கிளிநொச்சி நிலைமை. அது சரியா பிழையா என்பதையெல்லாம் நாம் அலசப்போவதில்லை.

பங்காளிக் கட்சிகள், கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டி யிட விரும்பினால், இரகசியமாக சுயேச்சையாக களம் இறங்கலாம். அப்படியில்லாமல் தமது கட்சியின் பேரி லேயே போட்டியிட்டால் அது கூட்டமைப்பு உடைந்து விட்டது என்பதை பறைசாற்றுவதாக மாறிவிடும். அதனால் அப்படி செய்யாமல் அவர்கள் சுயேச்சையாக களம் இறங்கி னாலும் சிறீதரன் விட்டுவைக்கப் போவதில்லை. அவர்களை இலக்கு வைத்து தானும் சில சுயேச்சைளை களம் இறக்கு வார். இதனை தான் ஏற்கனவே, கடந்த தேர்தலிலும் செய்த தாக அவரே பகிரங்கமாக அறித்திருந்ததையும் வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

தேர்தல் நெருங்கநெருங்க இன்னும் பல சம்பவங்கள் நடக்கத்தான் போகின்றன. பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# வடக்கு நிறுவனங்கள் ஈ. பி. எவ்., ஈ. ரி. எவ். செலுத்துவதை காட்சிப்படுத்த வேண்டும்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

வட மாகாணத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் வரு கின்ற புதிய ஆண்டில் இருந்து ஊழியர் நாளேடு பயன்படுத்தப் பட வேண்டும் இல்லாது போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாண தனியார் ஊழியர் சங் கத்தின் தலைவர் சாமிநாதன் சிவகுமார் அறிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்

தனியார் நிறுவனங்களில் 80 வீதமான ஊழியர்கள் தமது வரவை நிறுவனங்களில் பதிவு செய்வதில்லை. எனவே வரு கின்ற புதிய ஆண்டில் இருந்து அவர்களுக்கான நாளேடு காட் சிப்படுத்துவதுடன் ஈ. ரி. எவ்., ஈ. பி. எவ். இலக்கமும் நாளேட் டில் காட்சிப்படுத்தப் பட வேண்டும். இல்லாது தனியார் நிறுவனங்கள் மீது சட்ட நட வடிக்கை எடுப்போம்.

பெரிய தனியார் நிறுவனங் களில் இந்த நடைமுறை இருக்கிறது. சிறிய நிறுவனங் கள், புடவை கடைகள், உண வகங்களில் தான் இந்த நடைமுறை இருப்பதில்லை.

எனவே, ஊழியர்கள் வேலைக்கு வந்து செல்லும் நேரம் நாளேட்டில் பதிவு செய்து காட்சிப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

(ஐ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதிய அதிபராக லலீசன் நியமனம்!

யாழ்ப்பாணம், டிசெ. 31

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலா சாலையின் புதிய அதிபராக நாளை முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வரும்வகையில் சந்திர மௌலீசன் லலீசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை கலாசாலையின் அதிபராக கடமையாற்றிய ச. கருணை லிங்கம் இன்று சனிக் கிழமை 31ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் செல்கி றார். இதையடுத்து பிரதி அதிபராகக் கடமையாற்றி வந்த ச. லலீசன் அதிப ராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய கல்வி அமைச்சு இவருக்கான நிய மனத்தை வழங்கியுள்ளது.

(ஐ)



# 13 வயது சிறுமிமீது வன்புணர்வு; முல்லைத்தீவில் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவு - முள்ளிய வளை பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட கிராமம் ஒன்றில் 13 வய துச் சிறுமியை பாலியல் துஷ் பிரயோகம் செய்த மாமன் உறவு முறையானவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாயை இழந்த சிறுமி தந்தை மற்றும் சகோதரனுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந் நிலையிலேயே கடந்த ஒக்ரோ பர் 17ஆம் திகதி வீட்டில் தனி மையில் இருந்த சிறுமியை மாமன் வன்புணர்வுக்கு உள் ளாக்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தனக்கு நேர்ந்ததை ஆசிரிய ருக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து, அந்தப் பிரதேச சிறுவர் அபிவிருத்தி உத்தியோ கத்தருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டு சிறுமியை துஷ்பிரயோ கம் செய்தவர் கைது செய்யப் பட்டார். கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னி லைப்படுத்தும் நடவடிக்கை யில் முள்ளிய வளை பொலி ஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டுள்ள குடும்பஸ்தர் சிறுமிக்கு அக்கா முறையான 20 வயதுடைய யுவதி யையும் பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தியமை விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

(ஐ)

# குளிக்கச் சென்ற மூதாட்டி கிணற்றில் சடலமாக மீட்பு

வடமராட்சி, டிசெ. 31

வடமராட்சி - அல்வாய் பகுதியில் கிணற்றில் இருந்து 60 வயதுடைய மூதாட்டி ஒரு வரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

அல்வாய் - அம்பாள் கோவி லடியைச் சேர்ந்த முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அம் பாள் வித்தியாலயத்துக்கு பின்புறமாக உள்ள கிணற்றில் இருந்தே சடலம் மீட்கப்பட் டுள்ளது.

கிணற்றில் குளிப்பதற்கு சென்றவரே தவறி வீழ்ந்திருக் கலாம் என முதல்கட்ட விசா ரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

குறித்த கிணறு அறுபது அடி ஆழம் கொண்டது. கிணற்றில் அமைக்கப்பட்ட கப்பி பாது காப்பற்ற முறையில் உள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில், பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# சபிக்கப்பட்ட இலங்கை விமோசனம்பெற பெண்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்!


## சந்தியா எக்னெலிகொட தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம். குவேனி காலத்திலி ருந்தே சபிக்கப்பட்ட தேசம். இந்த நாடு சாபங்களில் இருந்து விடுபடவேண்டும் என்றால் பெண்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று சந்தியா எக் னலிகொட தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த நேர்காணல் ஒன்றிலேயே இதனைத் தெரி வித்தார்.

இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம். குவேனியின் காலம் முதல் பெண்கள் இந்த நாட்டை சபித்துள்ளனர். அரசியல் அதி காரத்துக்கு வந்த அனைவரும் இந்த நாட்டின் பெண்களின்



மகிழ்ச்சியை பறித்துள்ளனர்.

தங்களுக்கு நீதி வழங்கப்பட வில்லை என்பதை அறிந்ததும் பெண்கள் இந்த நாட்டை சபித் துள்ளனர். இந்த நாடு இந்த சாபங்களில் இருந்து விடு படாது. இந்த நாடு சாபங்களில் இருந்து விடுபடவேண்டும் என்றால் பெண்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் கூட காணாமல் ஆக்கப்பட்ட வர்கள் விடயத்தில் அவர்களது குடும்பத்தவர்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டியது தனது கடமை என கருதவில்லை. உண்மையில் எந்த அரசாங்க மும் இது தனது கடமை என கருதவில்லை.

அவர்கள் தங்களால் ஐ. நாவையும் உலக நாடுகளையும் ஏமாற்ற முடியும் இந்த பிரச்னை களுக்கு தீர்வை காண்பதற்காக எதனையும் செய்யவேண்டிய தில்லை என கருதினார்கள். இதற்கும் மேலாக அவர்கள் ஐ. நாவின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை என தெரிவித்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
31.12.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 16

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சி எவரின் தலைமையின் கீழ்?

இலங்கை தமிழரசு கட்சி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட்டை தவிர, வேறு எந்தவொரு கட்சிகளுடன் கூட்டணி அமைக்கப் போவதில்லை என்று கட்சியின் முக்கியஸ்தர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர், தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினர் கலந்துரையாடியிருந்தனர். அதன் முடிவில் அனைவரும் ஓரணியாக செயல்படுவதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. மாவையின் தலைமையை ஏற்க தயராக இருப்பதாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில்தான் சுமந்திரன் அந்தக் கருத்தை மறுத்திருக்கின்றார்.

கடந்த ஒரு வருடமாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய அணியினரான விக்னேஸ்வரன் தரப்பு கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு ஒன்றிணைந்து கடிதங்களை அனுப்பியிருந்தனர். அதேபோன்று, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பும் விடயத்திலும் ஒன்றாக பயணித்திருந்தனர். அண்மையில், சம்பந்தன் இல்லத்தில் ஒன்று கூடி விவாதித்திருந்தனர். இவ்வாறான பின்னணியில்தான் மாவையுடனான சந்திப்பும் இடம்பெற்றது. ஆனால், தற்போது வெளியிலிருப்பவர்களுடன் கூட்டணி இல்லையென்று சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

ஒருபுறம் கட்சியின் தலைவராக அடையாளம் காணப்படும் மாவை சேனாதிராசா ஏனைய கட்சிகளுடன் சந்திப்புகளில் ஈடுபடுகின்றார். ஆனால், அதற்கு மாறான நிலைப்பாட்டையே சுமந்திரன் வெளிப்படுத்துகின்றார். இறுதியில் சுமந்திரனின் நிலைப்பாடே கட்சியின் நிலைப்பாடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் சுமந்திரனை தவிர்த்து முன்னெடுக்கப்படும் அனைத்து நகர்வுகளும் தோல்வியிலேயே முடிகின்றன.

இலங்கையின் அரசியலில் பல கட்சிகளும் தேர்தல்களை எதிர்கொள்வது தொடர்பில் தங்களுக்குள் கலந்துரையாடி வருகின்ற சூழலில் - தமிழ் அரசியல் சூழலில் முடிந்தவரைக்கும் அனைவரும் ஓரணியாக நிற்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இங்கு கூட்டணி என்று அழைப்பதில் ஒரு சிக்கலுண்டு. அதாவது, தற்போது கூட்டமைப்புக்கு வெளியிலிருக்கும் அனைத்து கட்சிகளுமே கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவைகள்தான். சம்பந்தனை பொறுத்தவரையில் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் அனைவரும் கூட்டமைப்புடன் மீளவும் இணைந்து கொள்வதில் தடையில்லை. ஆனால், அது ஒரு புதிய கூட்டணியாக இருக்க முடியாது. சம்பந்தனின் நிலைப்பாட்டைத்தான் சுமந்திரன் வெளிப்படுத்துகின்றார். விக்னேஸ்வரன் தலைமையில் சென்ற கட்சிகளை பொறுத்தவரையில் தாங்கள் வெளியேறியதற்கான காரணங்கள் அகற்றப்பட வேண்டுமென்னும் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். இந்த விடயத்தை பங்காளிக் கட்சிகளால் கையாள முடியுமா?

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பொறுத்தவரையில் கட்சிகள் இணைந்து பயணிப்பது முக்கியமானதொரு விடயமல்ல. ஆனால், மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களைப் பொறுத்தவரையில் இணைந்து செல்லாவிட்டால் மோசமான பின்னடைவுகளை சந்திக்க நேரிடும். இது அடிப்படையில் தேர்தலில் ஆசனங்களைப் பெறும் விடயமல்ல. அதற்கப்பால், மாகாண சபையை கைப்பற்றுவதுடன் தொடர்புபடும் விடயம். ஒன்றாக இணைந்து தேர்தல்களை எதிர்கொள்ளாவிட்டால் கூட்டமைப்பால் தனித்து சபையை கைப்பற்ற முடியாமலும் போகலாம். இந்த விடயங்களை கருத்தில் கொண்டுதான் தமிழரசு கட்சியும் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். முதலில் தமிழரசு கட்சிக்குள் யார் தலைமையென்னும் விடயத்தில் கட்சிக்குள் உறுதியான நிலைப்பாடிருக்க வேண்டும்.

தமிழரசு கட்சியின் அணுகுமுறைகள் குழப்பகரமானவையாக இருக்கின்றன. கட்சியின் தலைவராக அறியப்படும் மாவை சேனாதிராசாவின் முடிவுகளும் கட்சியின் சார்பில் ஏனையவர்கள் முன்னெடுக்கும் அணுகுமுறைகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன. இவ்வாறான குழப்பகரமான நிலைப்பாடுகள் இறுதியில் கூட்டமைப்பையே மேலும் பலவீனப்படுத்துகின்றது. பங்காளி கட்சிகளும் தங்களது பலம், பலவீனம் அறிந்து செயல்பட வேண்டும். தமிழரசு கட்சியை தவிர்த்து ஏனையவர்களுடன் இணைந்து பயணிக்கும் தற்துணிவு இருந்தால் மட்டும்தான் ஏனையவர்களுடன் உரையாட வேண்டும். இல்லாவிட்டால், தமிழ் மக்களின் நலன்சார்ந்த விடயங்களில் மட்டும் இணங்கிச் செயல்படும் முடிவுடன் உரையாடல்களை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களை குழப்பும் நடவடிக்கைகளை அனைவருமே நிறுத்த வேண்டும்.

# யாழ். மக்களுக்கு செயலாற்ற கிடைத்தமை பெரும் பாக்கியம்!

## பிரியாவிடை நிகழ்வில் அரச அதிபர் மகேசன்!



யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ். மாவட்ட மக்களுக்காக சேவையாக செயலாற்ற கிடைத்ததை நான் பெரும் பாக்கியமாகதான் நினைக்கின்றேன் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலராகப் பணியாற்றி வந்த க. மகேசன் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவர், இன்றுடன் நடைமுறைக்கு வரும் வகையில் யாழ். மாவட்ட செயலர் பதவி மாற்றம் பெறுகிறார். இவருக்கு நேற்றைய தினம் பிரியா விடை அளிக்கப்பட்டது. யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “குறிப்பாக பல்வேறு பகுதிகளில் இருந்து மாற்றமாகி வருகின்ற மாவட்ட செயலாளர்கள் யாவரும் தற்பெருமையோடும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டு வந்துள்ளனர். எனக்கும் இந்த மூன்று வருடங்களும் சேவையாற்றக் கிடைத்தது பல எதிர்பார்ப்புகளையே தந்துள்ளது. குறிப்பாக எமது பிரதேச செயலாளர்கள், பதவிநிலை அதிகாரிகள், இடர் அனர்த்த முகாமைத்துவம், கொரோனா தொற்று போன்ற காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் இடங்களுக்கு சென்று அதனை அவதானித்து அதற்கான பரிகாரங்கள், நிவராணங்களை பெற்றுத்தந்தனர்.

அதற்கான நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் எனைய உத்தியோகத்தர்களும் உறுதுணையை வழங்கியுள்ளனர்.

எனவே, எதிர்வரும் காலத்திலும். இவ்வாறு பணிகளான சேவைக்கும், எனக்கு பணித்து இருக்கும் இளைஞர் விளையாட்டு திறன் அமைச்சுடைய செயலாளர் பதவிக்குப் பக்கபலாக இருந்து செயல்படுவேன் - என்றார்.

(ஐ)

# சீன அரிசியில் மனிதாபிமானம் இல்லை வல்லாதிக்க போட்டி அரசியலே உள்ளது!

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31

தமிழ் மக்களின் உணவுப் பண்பாட்டில் கடலட்டை எவ்வாறு இல்லையோ, அதேபோன்றே சீனா வழங்கிய ‘ஸ்ரிக்கி றைஸ்’ ரக அரிசியும் இல்லை. சீனா மனிதாபிமான நோக்கில் அரிசியை வழங்கியிருந்தால் எங்களின் பயன்பாட்டிலுள்ள அரிசியைத் தெரிவு செய்து வழங்கியிருக்கும். ஆனால், இந்தச் சீன அரிசியில் மனிதாபிமானம் இல்லை - வல்லாதிக்கப் போட்டி அரசியலே அதிகமாகவுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் “அற்றார் அழிபசி தீர்த்தல்” என்ற திட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாக நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவி வழங்கிய நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


“பொருளாதார நெருக்கடியால் முழு இலங்கையிலும் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. அதிலும் ஏற்கனவே யுத்தத்தாலும் கொரோனாவாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உணவுப் பற்றாக் குறையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பட்டினியால் குடும்பங்கள் படும் அவலத்தை சீனா சாதகமாகப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் மனதிலும் தமிழ் மண்ணிலும் வேரூன்றும் முயற்சியாகவே அரிசியை வழங்கி வருகிறது. பசியோடு இருக்கும் மக்களைச் சீன அரிசியை நிராகரிக்குமாறு எவருமே கோர முடியாதபோதும் இந்த அரிசியிலுள்ள அரசியலை எமது மக்களுக்குப் புரியவைக்க வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி உடனடியாகத் தீரப்போவதில்லை. இதனாலேயே அரசாங்கம் பயன்படுத்தாமலுள்ள காணிளை எடுத்து இராணுவத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளது. இது உணவு உற்பத்தி என்ற பெயரில் காணிகளை கையகப் படுத்தும் மறைமுக நோக்கத்தையும் கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கில் உள்ள வெற்றுக் காணிகளில் எமது பொது அமைப்புகள் அல்லது தன்னார்வலர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட முன்வரவேண்டும். பல வெற்றுக் காணிகளின் உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து வாழுகிறார்கள். குத்தகை அடிப்படையிலேனும் பயிர்ச்செய்கைக்கு காணிகளை வழங்க அவர்கள் முன்வரவேண்டும் - என்றார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
போட்டிகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள். வரவு செலவில் கவனம் தேவை. பொருளாதார நெருக்கடி ஏற்படும். திட்டமிட்ட செயல்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்**
எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் காண்பீர். நீங்கள் நினைத்தது நிறைவேறும். குடும்பத்தினர் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்**
வியாபாரத்தில் உங்கள் முயற்சிகள் நிறைவேறும். குடும்பத்தினர் ஆதரவு அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். அரசு வழியில் நன்மை உண்டாகும் நாள்.

**கடகம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். தடைபட்ட வேலையை மீண்டும் தொடங்குவீர்கள். வழக்கு சாதகமாகும் நாள். வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். தொல்லை கொடுத்தவரின் சதிகளை முறியடிப்பீர்கள்.

**சிம்மம்**
கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். உங்கள் எதிர்பார்ப்பு இன்று இழுபறியாகும். சந்திராஷ்டமம் என்பதால் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள். முயற்சிகள் தாமதமாகும். வேலை பளு அதிகரிக்கும்.

**கன்னி**
புதிய முயற்சி லாபத்தை ஏற்படுத்தும். வர வேண்டிய பணம் வந்து சேரும். நண்பர்கள் ஒத்துழைப்புடன் செயல் ஒன்று நிறைவேறும். திறமை வெளிப்படும் நாள் குடும்பத்திலும், மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்**
நிதிநிலை உயரும். சிந்தித்து செயல்படுவீர்கள். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர். பணியிடத்தில் உங்கள் உழைப்பிற்கு மதிப்பும், மரியாதையும் உண்டாகும்.

**விருட்சிகம்**
செயல்களில் கவனம் தேவை. தொழிலை விரிவு படுத்தும் முயற்சி நிறைவேறும். பணியாளர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தொழிலில் இருந்து வந்த தடை விலகும். திட்டமிட்டு செயல்படுவீர்.

**தனுசு**
உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்திற்காக நேரத்தை செலவுசெய்வீர்கள். யாரிடமும் வாக்கு வாதம் வேண்டாம். திட்டமிட்ட செயல்களில் லாபம் காண்பீர்கள்.

**மகரம்**
துணிச்சலுடன் செயல்பட்டுவீர்கள். பணிபுரியும் இடத்தில் திறமை வெளிப்படும். மற்றவர்கள் பாராட்டுவார்கள். புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். வருமானம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**
தடைபட்டிருந்த வருமானம் வந்து சேரும். சுறு சுறுப்புடன் செயல்பட்டு நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். வரவேண்டிய பணம் வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**மீனம்**
விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். மனதில் குழப்ப நிலை உண்டாகும். செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். குடும்பத்திற்காக மேற்கொள்ளும் முயற்சி இழுபறியில் முடியும். பொறுப்புணர்வு தேவை.

# தி.மு.கவின் மஸ்தான் எம்.பி. கொலையே செய்யப்பட்டார்!

## விசாரணையில் திடீர் திருப்பம்

சென்னை, டிசெ. 31

மாநில சிறுபான்மையினர் நல ஆணைய துணைத் தலைவரும், தி. மு. க. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மஸ்தான் கொலை செய்யப்பட்டது பொலிஸாரின் தொடர் விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

தி. மு. க. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய துணைத் தலைவரும், தி. மு. க. சிறுபான்மையினர் நல உரிமை பிரிவுச் செயலாளராக இருந்த மஸ்தான் (66). இவர் குடும்பத்துடன் சென்னை சேப்பாக்கத்தில் வசித்து வந்தார்.

கடந்த 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை சென்னையை அடுத்த ஊரப்பாக்கத்தில் காரில் சென்று கொண்டிருந்த போது, திடீரென அவருக்கு நெஞ்சுவலி வலிப்பு ஏற்பட்டதை அடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஆனால், அவரின் குடும்பத்தினர் மஸ்தான் மறைவில் சந்தேகம் இருப்பதாக காவல் துறையில் புகார் அளித்தனர். இதையடுத்து மஸ்தான் மறைவை சந்தேக மரணமாக ஊரப்பாக்கம் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். நெஞ்சுவலி வலிப்பால் இறந்ததாக கூறப்பட்ட நிலையில் மஸ்தான் மறைவில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

அதாவது, மஸ்தான் சந்தேக



மரண வழக்கு விசாரணையில், அவரின் சகோதரரின் மருமகன், கார் ஓட்டுநர் உள்ளிட்ட 5 பேரை பொலிஸார் கைது விசாரணையில் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. விசாரணையில், மஸ்தான் உறவினர்களால் கொலை செய்யப் பட்டது அம்பலமாகி உள்ளது.(ஐ)

# 60 வருட ஆட்சியின் பின்பும் தீண்டாமை; திராவிடக் கட்சிகளின் தோல்வியே!

## நாம் தமிழர் சீமான்


சென்னை, டிசெ. 31

"அறுபதாண்டுகளுக்கும் மேலாக சாதியொழிப்பு, சமூக நீதி என்றுப் பேசி, திராவிடக் கட்சிகள் தொடர்ச்சியாக தமிழ் மண்ணை ஆண்டபின்பும் சாதியின் பெயரால் நடைபெறும் இதுபோன்ற தீண்டாமைக் கொடுமைகள் திராவிடக் கட்சிகளின் தோல்வியையே காட்டுகிறது" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"புதுகோட்டை மாவட்டம் இறையூர் கிராமம் வேங்கை வயலில் வசித்து வரும் ஆதித் தமிழ் மக்கள் தீண்டாமை கொடுமைகளுக்கு ஆட்படுத்தப் படுத்தப்படும் செய்தியறிந்து உடனடியாக இப்பிரச்னையில் தலையிட்டு ஆதித் தமிழ் மக்களை கோயிலுக்குள் அழைத்துச் சென்று அவர்களின் உரிமையை மீட்டு தந்ததோடு, அதற்கு எதிராக நின்றவர்களையும், இரட்டை குவளை முறையைக் கடைபிடித்து தீண்டாமைக் கொடுமை புரிந்தவர்களையும் உடனடியாக கைது செய்த புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர், சகோதரி கவிதா ராமுவின் துணிகரச் செயலுக்கும், அவரோடு துணை நின்ற காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் எனது பாராட்டும், வாழ்த்துகளும்.

இதே போல் வேங்கைவயலில் ஆதித்தமிழ்மக்கள் பயன்படுத்திய குடிநீர்த்தேக்கத் தொட்டியில் மனித கழிவை கலந்த சமூக விரோதிகள் செயல் ஏற்றுக்கொள்ளவே முடியாத பெருங்கொடுமையாகும். அதனை பருகிய குழந்



தைகள் உடல் நலம் பாதிக்கப் பட்டு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் செய்தி மிகுந்த துயரத்தை அளிக்கிறது. சிறிதும் மனச்சான்று இன்றி இத்தகைய வன்கொடுமைகளைப் புரிந்த சமூகவிரோதிகள் யாராக இருந்தாலும் அவர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தின் மூலம் கடும் தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும் மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொள்கிறேன் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# பிரியங்கா காந்தி தலைமையில் தமிழகத்தில் மாபெரும் பேரணி!

## காங்கிரஸ் கட்சி அறிவிப்பு

சென்னை, டிசெ. 31

தமிழகத்தில் பிரியங்கா காந்தி தலைமையில் மாபெரும் மகளிர் பேரணி நடத்தப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை நடைபயணத்தின் தொடர்ச்சியாக, 'அரசியலமைப்பை பாதுகாப்போம் - கையோடு கைகோர்ப்போம்' என்ற பரப்புரையை தமிழகத்தில் முன்னெடுப்பது தொடர்பான கூட்டம் நேற்று நடந்தது.

கூட்டத்தின் முடிவில் அழகிரி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் 100 காங்கிரஸ் கொடிகள் ஏற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்தகட்டமாக வீடு வீடாக சென்றுமக்களை சந்திக்கும் விதமாக 'அரசியலமைப்பை பாதுகாப்போம்-கையோடு கைகோர்ப்போம்' என்ற



பரப்புரையை ஜனவரியில் தொடங்க இருக்கிறோம்.

இது தொடர்பாக மாவட்ட தலைவர்களுடன் விவாதிக்கும் கூட்டம் இன்று (நேற்று) நடைபெற்றது. இந்த பரப்புரையை மாநிலஅளவில் ஜனவரி 15ஆம் திகதிக்குள்ளும், மாவட்ட அளவில் 16 முதல் 30ஆம் திகதிக்குள் முடிக்கவும், ஆன்லைன் சூதாட்ட மசோதா உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட மசோதாக்களை முடக்கி வைத்திருக்கும் தமிழக ஆளுநருக்கு எதிராக போராட்டம் நடத்த வேண்டிஇருக்கும் என எச்சரிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் பிரியங்கா காந்தி தலைமையில் மாபெரும் மகளிர் பேரணி நடத்தப்பட உள்ளது. அதில் மகளிர் கொள்கை விளக்க அறிக்கையை பிரியங்கா வெளியிட உள்ளார் - என்றார். (ஐ)

# மக்கள் ஆணைக்கு பயந்து தேர்தலை பிற்போட முயற்சி

## அரசு வெட்கப்படவேண்டும் என்கிறார் வாசுதேவ

கொழும்பு, டிசெ.31

**மக்களாணைக்கு அச்சமடைந்து தேர்தலை பிற்போட முயற்சிப்பதையிட்டு அரசாங்கம் வெட்கமடையவேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

அனைத்து அரசியல் கட்சிகளும் கூட்டணி அடிப்படையில் போட்டியிட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளன.

அத்துடன், எந்த கட்சியும் இனி தனித்து போட்டியிட்டு வெற்றி பெற முடியாது-என்றார். (அ)

# வளி மாசடைவதை அளவீடு செய்யும் கருவி இலங்கைக்கு

கொழும்பு, டிசெ. 31

வளி மாசடைவதனை அளவீடு செய்வதற்காக உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு சில கருவிகளை வழங்கியுள்ளது.

சுற்றாடல் அதிகாரசபையின் வளி மாசடைதல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சஞ்சய ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இந்த கருவிகள் யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய நகரங்களில் பொருத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வளி மாசடையும் போது அவற்றை அளவீடு செய்ய இந்த கருவிகள் உதவும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# அரச பாடசாலைகளில் 2023 இல் புதிய திட்டம்!

## பிரதி புதன்கிழமைகளில் 10 நிமிடங்கள் மாணவர் விழிப்புணர்வுச் செயற்திட்டம்

அம்பாறை, டிசெ. 31

இலங்கையில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் புது வருடத்தில் இருந்து பிரதி புதன்கிழமைகளில் காலை 10 நிமிடங்கள் மாணவர் விழிப்புணர்வு செயல்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சு சகல மாகாண வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

முதல் 12 புதன்கிழமைகளில் காலை 7.30 மணிமுதல் 7.40 மணி வரை இப் புதிய விழிப்புணர்வு செயற்திட்டம் அமுலாக்கப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி புதன்கிழமை முதலாவது நாள் திட்டம் அறிமுகமாகவுள்ளது.

நாளை மறுதினம் இரண்டாம் திகதி திங்கட்கிழமை பாடசாலை மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகின்றது என்பது தெரிந்ததே.

ஆக பத்து நிமிடங்களைக் கொண்டதாக "நிலையான தன்மையில் அமர்த்தல்" என்ற தொனிப் பொருளில் இந்த வேலைத்திட்டம் 12 புதன் கிழமைகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் விழுமியங்கள் மற்றும் பண்புசார் விருத்தி தொடர்பாக இப் புதிய விழிப்புணர்வு செயற்திட்டம் அமல்படுத்தப்பட இருக்கின்றது.

நிலையான தன்மையில் அமரச் செய்தல் என்ற இந் நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இதனை சர்வ மத குழுக்கள் கண்காணிக்க இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# மதமாற்ற கொள்கை உடைய அரச அதிபர் இங்கு வேண்டாம்

## யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ். மாவட்டத்துக்கு மதமாற்றக் கொள்கை கொண்ட அரச அதிபரை நியமிக்கவேண்டாம் எனக் கோரி போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றத்தில் செல்ல இருக்கின்றார். யாழ். மாவட்டத்துக்கு புதிதாக அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.



இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபராக, மதமாற்றக் கொள்கை உடையவர் நியமிக்கப்பட உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளதாக தெரிவித்து, அவரை யாழ். மாவட்டத்துக்கு நியமிக்க வேண்டாம் எனக் கோரி சிவ சேனை அமைப்பினரால் நேற்று யாழ். மாவட்ட செயலக முன்றலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "சிவத் துரோகிகள் தமிழ் இனத் துரோகிகள்" உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# தகவல் கிடைத்தால் மட்டுமே பொலிஸார் மாணவரிடம் போதைப்பொருள் சோதனை

கொழும்பு, டிசெ. 31

பாடசாலை மாணவர்களை பரிசோதனை செய்வது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பில் தகவல்கள் இருந்தால் மாத்திரமே பாடசாலை மாணவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும் என பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை வீண் சோதனை செய்வதை தவிர்க்குமாறும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், வீதிகளில் பாடசாலை மாணவர்களை சோதனையிடுவதையும், காணொளி பதிவு செய்வதையும் தவிர்க்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# நாட்டின் தேயிலை, இறப்பர் உற்பத்தியில் பின்னடைவு

கொழும்பு, டிசெ. 31

நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் 10 மாதங்களில் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதன்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த தேயிலை உற்பத்தி 258.9 மில்லியன் கிலோகிராம் எனவும், இந்த ஆண்டில் 10 மாதங்களில் மொத்த தேயிலை உற்பத்தி 211.1 மில்லியன் கிலோகிராம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த 2021 ஆம் ஆண்டில் முதல் 10 மாதங்களில் மொத்த இறப்பர் உற்பத்தி 66.3 மில்லியன் கிலோகிராம் எனவும், இந்த ஆண்டில் 10 மாதங்களில் மொத்த இறப்பர் உற்பத்தி 59.2 மில்லியன் கிலோகிராம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 2021 ஆம் ஆண்டில் மொத்த தேங்காய் உற்பத்தி 2577.2 மில்லியன்களாகவும், இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் தேங்காய் உற்பத்தி 2850 மில்லியன் என வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

# பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஆவணங்கள் கிளிநொச்சியில் திருட்டு

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர், பெண்களுக்கான அபிவிருத்திப் பணியில் ஈடுபடும் பெண்கள் வாழ்வுரிமைக் கழகம் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தில் முக்கிய ஆவணங்கள் திருடப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தின் மடிக்கணினிகள் இரண்டு, கணினி ஒன்று, கண்காணிப்பு கமராவின் டி.வி.ஆர் உள்ளிட்ட சுமார் 8 லட்சம் ரூபா மதிக்கத்தக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அலுவலகம் அமைந்துள்ள வீட்டின் கூரை ஊடாக உள் நுழைந்து இந்த திருட்டு இடம் பெற்றுள்ளது.

குறித்த நிறுவனத்தால் பெண்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் அரசியல் உரிமைசார் விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போலித் துப்பாக்கியைக் காட்டி கொள்ளையிட முற்பட்டவர் கைது

கொழும்பு, டிசெ. 31

போலி இலக்கத் தகடுகளைக் கொண்ட கெப் வாகனத்தில் சென்று போலித் துப்பாக்கியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து கொள்ளையிட முற்பட்ட நபர் ஒருவர் வத்தளையில் உள்ள உல்லாச விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபருடன் போலி இலக்கத் தகடுகள், பொம்மை கைத்துப்பாக்கிகள் மற்றும் போலி இலக்கத் தகடுகள் கொண்ட கப் வண்டியும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறிப்பிட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் ஜாஎல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குச் சென்று அங்கிருந்தவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பின்னர் போலித் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வீடொன்றுக்கு சென்று அச்சுறுத்தியதாக பொலிஸார் தெரிவித் தனர்.

சிசிரிவி கமராவில் சந்தேக நபர் ஒரு குழுவினருடன் வாக்குவாதம் செய்வதும் போலித் துப்பாக்கியை எடுத்துச் செல்வதும் பதிவாகியுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 39 வயதுடைய ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். (அ)

# தேர்தலை பிற்போடும் தேவை எமக்கில்லை!

## தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, டிசெ.31

**தேர்தலை பிற்போடவேண்டிய தேவை ஆணைக்குழுவுக்கு கிடையாது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.பத்திரண தெரிவித்தார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தலுக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அரசியல் களத்தில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தேர்தலை பிற்போட தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு திரை மறைவில் இருந்து கொண்டு செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளதால் அனைவரது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்கிறோம்-என்றார். (அ)

# நல்லூர் கோவில் வீதியில் விடுதிக்குள் வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாணம் - நல்லூர் கோவில் வீதியிலுள்ள தனியார் விடுதியொன்றுக்குள் நுழைந்த மர்ம கும்பல் நடத்திய வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி இளைஞனொருவர் காயமடைந்துள்ளார்.

பண்டத்தரிப்பு அம்மன் கோவில் வீதியை சேர்ந்த சுரேஷ்குமார் கலைக்லஸன் (வயது 21) எனும் இளைஞனே காயமடைந்துள்ளார்.

மூன்று மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 08 மணியளவில் வந்த வன்முறைக் கும்பல் விடுதியில் நின்றவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

வாள்வெட்டுக்கான காரணம் தெரியவராத நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இரத்தினக்கல் பொதியை திருடிய இருவர் சிக்கினர்!

கொழும்பு, டிசெ. 31

சுமார் 04 கோடி ரூபா பெறுமதியான 116 இரத்தினக் கற்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று களுத்துறையில் பதிவாகியுள்ளது.

தெஹிவளை பிரதேசத்தில் மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவர் கொழும்பில் இருந்து தெய்யந்தர நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போது அவரது பயணப் பையில் இருந்த பல பொதிகள் திருடப்பட்டுள்ளன.

பஸ்ஸில் 116 இரத்தினக் கற்கள் இருந்ததை அறியாமல் சந்தேக நபர் பஸ்ஸிற்குள்ளேயே திருடப்பட்ட பொதியை வைத்துவிட்டு பேருவளை பகுதியில் இறங்கியுள்ளார்.

அதன்படி குறித்த பஸ்ஸின் நடத்துநர் பொதியை எடுத்து வீட்டுக்கு கொண்டு சென்று மறைத்து வைத்துள்ளார்.

திருடப்பட்ட விவகாரம் வெளியாகிவிடும் என்ற அச்சத்தில் பஸ்ஸில் இருந்த பாதுகாப்பு கமரா அமைப்பையும் அகற்றியுள்ளார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போது பேருவளை நகரில் பஸ்ஸை நிறுத்தியபோது, முதலில் இரத்தினக்கற்கள் அடங்கிய பொதியை திருடிய சந்தேக நபர் பீதியடைந்து பஸ்ஸை விட்டு இறங்கி அருகில் உள்ள வைத்திய நிலையத்துக்கு திருடப்பட்ட பொதி இன்றி ஓடுவதை அவதானித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதன்படி, பஸ்ஸின் நடத்துநர் மீது விசாரணை அதிகாரிகள் சந்தேகம் அடைந்து விசாரணை நடத்தினர்.

சந்தேகநபரிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தியதில், மறைத்து வைக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் பொதியைக் கண்டுபிடிக்க முடிந்தது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 48 மற்றும் 36 வயதுடைய ஊருபொக்க மற்றும் பயாகல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 2023 முதல் புதிய நடைமுறைகளை அறிவித்த குடிவரவு திணைக்களம்

கொழும்பு, டிசெ. 31

வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணிகள் ஜனவரி 1, 2023 முதல் வருகை மற்றும் புறப்பாடு அட்டைகளை ஒன்லைன் ஊடாக பூர்த்தி செய்வதற்கான வசதிகளை குடிவரவுத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கான வருகை அட்டைகள் மற்றும் நாட்டை விட்டு வெளியேறும் இலங்கையர்களின் புறப்பாடு அட்டைகள் புதிய முறையின் மூலம் சரிபார்க்கப்படும்.

எனவே, இரண்டு விமானப் பயணிகளும் தங்கள் பயணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு தங்கள் அட்டைகளை ஒன்லைனில் நிரப்ப முடியும்.

திணைக்களம் பயணிகளை www.immigration.gov.lk my;yJ https://eservices.immigration.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திற்கு ஊடாகப் பார்வையிடுமாறு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், பயணிகள் குடிவரவு மற்றும் குடியகல்வு நடைமுறைகளை எந்தவித அசௌகரியமும் இன்றி நிறைவு செய்ய முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கை மின்சார சபைக்கு விடை கொடுக்கும் 1,100 பேர்!

கொழும்பு, டிசெ. 31

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் சுமார் 1,100 ஊழியர்கள் 2023ஆம் ஆண்டு ஓய்வுபெற உள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எவ்வாறாயினும், குறித்த வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், 2022 செப்ரெம்பர், ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான மின்சார சபை ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக மாதாந்தம் 3.5 பில்லியன் முதல் 3.7 பில்லியன் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# அரச ஊழியருக்கு சம்பளமற்ற லீவு; 1,150 விண்ணப்பங்களுக்க அனுமதி!

கொழும்பு, டிசெ. 31

அரச ஊழியர்களுக்கு சம்பளமின்றி ஐந்தாண்டு விடுமுறை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஆயிரத்து 150 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் THUYAR.NET நெற்

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN NEWS

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# வீடுகள் டொலருக்கு விற்கும் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் டொலர்களுக்கு மேல் வருமானம்!

கொழும்பு, டிசெ. 31

நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடுத்தர வருமான வீடுகள் டொலருக்கு விற்கப்படும் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஈட்டியுள்ள தொகை 502,170.93 டொலர்களாகும். இது உள் ளூர் நாணயத்தில் 181.2 மில்லியன் ரூபாயாகும்.

இந்த ஆண்டு டொலர்களில் வீடுகள் விற்கப்பட்டு எதிர்பார்க்கப்படும் வருமானம் 05 இலட்சம் டொலர்கள்.

ஆண்டு முடிவதற்குள் அந்த இலக்கை தாண்ட முடிந்ததாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த நாட்டின் டொலர் நெருக்கடிக்கு தீர்வாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட நடுத்தர வருமான வீடுகளை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டு இலங்கை தொழிலாளர்கள் கொள்வனவு செய்வதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, முதலாவது வீடு கடந்த செப்ரெம்பர் மாதம் விற்கப்பட்டது. டுபாயில் வசிக்கும் இலங்கையர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது 11 வீடுகள் டொலர்களுக்கு விற்கப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அந்த வீடுகள் பன்னிப்பிட்டிய, வீரமாவத்தையில் வியத்புர வீடமைப்புத் தொகுதியில் அமைந்துள்ளது.

தற்போது இந்த அடுக்குமாடி குடியிருப்பில் 2 படுக்கையறைகள் கொண்ட வீடுகள் முற்றாக விற்றுவிட்டதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

டுபாய், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஓமான், கட்டார் மற்றும் பிஜி தீவுகளில் வசிக்கும் இலங்கையர்கள் இந்த வீடுகளை வாங்கியுள்ளனர்.

வீடுகளுக்குரிய பணத்தை மொத்தமாக செலுத்துவதால் 10 சதவீதம் விலைக்கழிவும் கிடைக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாணய நிதியத்துடனான பேச்சு தவறான கருத்துகளால் பாதிப்பு

## செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.31

**அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு சில தவறான கருத்துக்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் தாக்கம் செலுத்தியதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையின் பிரதான நிலை கடன் வழங்குநர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை சாதகமாக உள்ளது.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இம்மாத இறுதியில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருந்தோம்.

இருப்பினும் பிரதான நிலை கடன் வழங்குநர்களின் கடன் காப்புறுதி கிடைப்பனவில் தாமதம் ஏற்பட்டதால் எங்களது எதிர்பார்ப்பு நிறைவேற வில்லை.

அரசியல் காரணிகளுக்கு அவதானம் செலுத்த முடியாத நிலையில் நாடு உள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் குறைந்த பட்சம் 10 பில்லியன் ரூபா செலவாகும்.

அரச சேவையாளர்களுக்கு சம்பளம், சுகாதாரம் உட்பட நலன்புரிச் சேவைகளுக்கு ஒரு மாதத்திற்கான நிதியை திரட்டிக் கொள்வது சவாலாக உள்ள நிலையில் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு ஒப்பீட்டளவில் தீவிரமடையும்-என்றார். (அ)

# தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம சேவகர்கள் போராட்டம்!





யாழ்ப்பாணம், டிசெ. 31

தெல்லிப்பளை பொலிஸாருக்கு எதிராக, தெல்லிப்பளை பிரதேச செயலக கிராம சேவகர்கள், பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஜே/239 பிரிவு கட்டுவன் மேற்கு கிராம சேவகர் அலுவலகம் சில தினங்களுக்கு முன்னர் தீயிட்டு எரிக்கப்பட்டது. இது குறித்து தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை தெல்லிப்பளை பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "சமாதான அலுவலர், சமாதான நீதிவானுக்கே இந்த நிலையா?, இன்று எங்களுக்கு நாளை உங்களுக்கு, எங்கள் சேவைக்கு பாதுகாப்பு இல்லையா?, அலுவலகத்தை சேதமாக்கியோரை கைது செய், தீ வைத்தது உங்கள் கை வெந்தது உங்கள் சொத்து" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# பெப்ரவரி மாதம் வெளியாகின்றது தரம்-5 புலமைப்பரிசில் பெறுபேறு?

கொழும்பு, டிசெ. 31

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

42 மையங்களில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எல். எம். டி. தர்மசேன தெரிவித்தார்.

6ஆயிரத்து 20 உத்தியோகத்தர்கள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும், பரீட்சை பெறுபேறுகள் பெப்ரவரி மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த டிசெம்பர் 18ஆம் திகதி 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை 2 ஆயிரத்து 894 பரீட்சை நிலையங்களில் இடம்பெற்றதுடன், மூன்று இலட்சத்து 34 ஆயிரத்து 698 மாணவர்கள் தோற்றியிருந்தனர். (அ)

# ஜனவரி மாதம் முதல் வாகன இலக்கத்தகடுகளில் மாற்றம்!

கொழும்பு, டிசெ. 31

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வாகன இலக்கத் தகடுகளின் மாகாணங்களை குறிக்கும் ஆங்கில எழுத்துகள் அகற்றப்படும் எனவும், அதற்கமைய எதிர்காலத்தில் வெளியிடப்படும் புதிய இலக்கத் தகடுகளில் ஆங்கில எழுத்துகள் அச்சிடப்படமாட்டாது எனவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

புதிய பதிவு மற்றும் ஏற்கனவே உள்ள இலக்கத் தகடுகளைக் கொண்ட வாகனங்களின் பதிவை மாற்றுவதற்கான கட்டணங்கள் கட்டாயம் செலுத்தப்பட வேண்டும் என்றும் வீரசிங்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# தடுமாறுகிறது இலங்கை

கொழும்பு, டிசெ. 31

புதிய ஆண்டுக்குள் கொண்டு செல்ல வேண்டாம் என்று நம்பியிருந்த பழைய பிரச்னைகளுடன் இலங்கை தடுமாறி நிற்பதாக சிங்கப்பூரில் செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.


வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பிணை எடுப்பதற்குத் தேவையான இருதரப்பு ஒப்புதல்களைப் பெறுவதற்கு தவறியுள்ளது.

டிசெம்பர் இறுதிக்குள் என்ற அதன் காலக்கெடுவுக்கு இன்னும் ஒரு நாளே உள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் மிகப்பெரிய கடன் கொடுநரான சீனாவுடன் இன்னும் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை என்று சிங்கப்பூர் செய்தித்தாள் கூறியுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்

மலர்வு 06 . 07 . 1940



உதிர்வு 22 . 12 . 2022

## கந்தையா வேலுப்பிள்ளை

யாழ். தச்சன்தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை அவர்கள் கடந்த 22-12-2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் இராஜலட்சுமி, முருகானந்தன், ஞானந்தன், மகாலட்சுமி, கேசாநந்தன், ஜெயலட்சுமி, வனஜலட்சுமி, யசோதரன், காலஞ்சென்ற தங்கலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பித்துரை, ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பத்மநாதன், ரட்ணவதி, ஜெகதீசன், சுசிகலா, சிவமலர், பரந்தாமன், திசோக்குமார், சுவர்ணா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரன், மயூரி, மதி, துஷ்சியா, பிரசாந், தமயந்தி, றணீவன், தீசன், தீபா, பார்த்தீபன், பிறிஸ்கா, கெரேயன், றெனீஸ், லனீஸா, லெளசானியா, விதுசன், கரிஸ்மா, அன்றோ, சயானி, சைன் ஆகியோரின் அன்புப் பேரனும் வியங்கா அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியை நாளை மறுதினம் (02.01.2023 ) திங்கட்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மலர்வு 03 . 10 . 1958



உதிர்வு 29 . 12 . 2022

## இம்மனுவேல் செபதாஸ் ராஜ்குமார் (குமார்) பெனடிக்ற்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸில் வாழ்ந்தவரும் தற்போது லண்டன் குறோய்டன் (Croydon) நகரில் வாழ்ந்தவருமான இம்மனுவேல் செபதாஸ் ராஜ்குமார் நேற்றுமுன்தினம் (29.12.2022) வியாழனன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை பெனடிக்ற் - லூட்ஸ் தங்கரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானசுந்தரம் - சிவக்கொழுந்து (லண்டன்) தம்பதியரின் அன்பு மருமகனும் கலா அன்னமலர் (கலா) அவர்களின் அன்புக் கணவரும் டிவினியாவின் அன்புத் தந்தையும்

இமல்டா, மல்லிகா, கிறிஸ்ரி, காலஞ்சென்ற சாந்தி மற்றும் ஹெலன் (வயலற்), ஜெசி, டள்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும்

காலஞ்சென்ற மரியாம்பிள்ளை நிக்கலஸ் மற்றும் மனோகரன், ஜசிந்தா, லிகோரி (ஜெயா), காலஞ்சென்ற செளந்தரராஜன் மற்றும் லக்கி டொமினிக் ஆகியோரின் அன்பு மைத்துனரும்

றஜித்தா – ராஜன், றஞ்ஜித்தா – சதீஸ், நிரோஷன் – ஜனனி, கிறிஸ்தோபர் – எமிலி, தர்சினி – மத்தியூ , ரிட்சி, கெல்சி, றயன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திரேசி – லவன், லவினியா – சரவணன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி, நல்லடக்கம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
**கலா (மனைவி): 0044 7477392568 - லண்டன்**
**கிறிஸ்ரி (சகோதரர்): 0044 7868728572 - லண்டன்**
**வயலற் (சகோதரி): 0044 7886286950 - லண்டன்**

# ‘முரட்டு உதை’ கால்பந்து உலகில் புரட்சி செய்த ‘மன்னர்’

- பெர்னாண்டோ டுவார்டே

கடைசியாக நான் பெலேவை நேரில் பார்த்தபோது, அவர் மத்திய லண்டனில் உள்ள ஒரு சுரங்கப் பாதை கிளையின் கவுன்டருக்கு பின்னால், சாலட் பில்லிங்ஸை சாண்ட்விச்சில் பொருத்த முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

அது மார்ச் 2015. அப்போது பிரேசிலிய கால்பந்து ஜாம்பவானின் கடினமான காலகட்டம் அப்போது தொடங்கியிருக்கவில்லை. தனது நாட்டு மக்களால் ‘கிங் பெலே’ என்று அழைக்கப்பட்ட அந்த மனிதருடன் சேர்ந்த அமெரிக்க துரித உணவு நிறுவனம் செய்யப்பட்ட ஒரு விளம்பர செயல் அது.

அதற்குள் பெலேவும் நானும் ஏற்கெனவே பலமுறை சந்தித்திருந்தோம். பத்திரிகையாளர்களுக்கு மத்தியில் அவர் என்னைக் கூட்டிச் சென்றபோது, அவருடைய முகத்தில் ஒரு நீண்ட புன்னகையை ஏற்படுத்துவதற்கு அது போதுமானதாக இருந்தது. அவருடன் நேரடியாக ஒரு நேர்காணலை பெறும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்திருந்தது. அவர் 74 வயதில் திடமாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது தான், அன்றைய மதிய நேரத்தின் என்னுடைய மகிழ்ச்சிகரமான நினைவு.

“மருத்துவமனை விஷயத்தில் அனைவரையும் கவலைப்படுத்துவிட்டீர்கள், கிங்” என்று நான் அவரிடம் கூறினேன்.

“நான் ட்ரெஸ் கொரகோஸ் (போர்ச்சுகீசிய மொழியில் மூன்று இதயங்கள்) என்ற ஊரில் பிறந்தேன் என்பதை மறந்துவிட்டீர்களா? ‘மூன்று இதயங்கள்’ உள்ள ஒருவரைத் தரையில் சாய்ப்பது கடினம்,” என்று அவர் சிரித்துக்கொண்டே பதிலளித்தார்.

“அவெஞ்சர்களில் ஒருவரைச் சந்திப்பதைப் போல”

ஓராண்டுக்கு முன்பு, சூரிச்சில் நடந்த கால்பந்து நிர்வாகக் குழுவான ஃபிஃபாவின் விருது வழங்கும் விழாவில் அவர் தோன்றியபோது அவர் மிகவும் பலவீனமாகத் தெரிந்தார். மற்ற பல பிரேசிலிய செய்தியாளர்களைப் போல, அவர் நீண்ட காலம் இருக்க மாட்டார் என்று நானும் உண்மையிலேயே கவலைப்பட்டேன்.



பெலே ஏற்கெனவே சிறுநீரக பிரச்னைகளுடன் போராடிக் கொண்டிருந்தார். அவரது 21 ஆண்டுகால தொழில்முறை கால்பந்து வாழ்க்கை முழுவதும் எதி ராளிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆட்டங்களில் அது சேதமடைந்திருந்தது.

நாங்கள் ஒவ்வொரு முறை சந்தித்துக் கொண்ட பிறகும், அதில் நடப்பதைப் பற்றி சிந்தித்துக்கொண்டே அடுத்த நாட்களைக் கழித்தேன். நம்மைப் பார்ப்பதில் எப்போதும் மகிழ்ச்சியடையக் கூடிய அவெஞ்சர்களில் ஒருவருக்கு முன்னால் இருப்பதைப் போல் இருந்தது.

பல கால்பந்து ரசிகர்களுக்கும், குறிப்பாக பிரேசிலியர்களுக்கும், எட்சன் அரான்டெஸ் டோ நாசிமென்டோவாக பிறந்த இவர் ஒரு சூப்பர் ஹ்யூமன். கால்பந்தை உதைத்தவர்களிலேயே மிகப்பெரிய விளையாட்டு வீரர்.

ஜான் லெனான் ஒருமுறை ராக் அண்ட் ரோலை சக் பெரி என்றழைக்க வேண்டுமெனக் கூறியதைப் போல், கால்பந்துக்கு பெலே எனப் பெயரிட்டிருக்க வேண்டும்.

ஒரு வீரராக மூன்று ஃபிஃபா உலகக் கோப்பைகளை வென்ற ஒரே நபர் அவர் தான். 1958இல் உலகக்கோப்பையை முதலில் வென்றபோது, அவருக்கு வயது 17 தான். பிறகு, 12 ஆண்டுகள் கழித்து மெக்சிகோவில் பட்டத்தை வென்ற பிரேசில் அணியின் ஒரு பகுதியாகவும் அவர் இருந்தார். அந்த அணி, இன்றும் சிறந்த அணிகளுக்கான வாக்கெடுப்பை நடத்தினால் அதில் வெற்றி பெறுகிறது.

அந்தப் போட்டியில் பெலேவின் செயல்திறனுக்கான சிறந்த பாராட்டுகளில் ஒன்று, இறுதிப்போட்டியில் அவரை குறிவைத்து ஆடியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தற்காப்பு ஆட்டக்காரரான இத்தாலியின் டார்சிசியோ பர்க்னிச்சின் பாராட்டு.

“அனைவரையும் போலவே அவரும் தோல், எலும்புகளால் ஆனவர் தான்’ என்று ஆட்டத்திற்கு முன்பு எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். ஆனால், நான் தவறு செய்துவிட்டேன்,” என்று அவர் குறிப்பிட்டார்.

பிரேசில் தனது மூன்றாவது உலகக் கோப்பையை வென்ற ஆட்டத்தில், பெலே ஒரு கோல் அடித்தார், இரண்டு கோல் வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்தார். அந்த கோல், அவர் தனது வாழ்க்கையில் அடித்த 1,200க்கும் மேற்பட்ட கோல்களில் ஒன்று.

**சாத்தியமே இல்லாத அளவிலான தேசிய பொக்கிஷம்**

பெலே விளையாட்டையும் மீறிய ஒரு தோற்றத்தைப் பதித்து வைத்தார். மறைந்த அமெரிக்க கலைஞரான ஆண்டி வார்ஹோல், புகழின் நிலையற்ற தன்மை குறித்த அவருடைய புகழ்பெற்ற மேற்கோளை திருத்திக்கொள்வதற்கே பெலேவின் புகழ் வழிவகுத்தது.

“எனது கோட்பாட்டிற்கு முரண்பாடான சிலரில் பெலேவும் ஒருவர். 15 நிமிட புகழுக்குப் பதிலாக, அவருடைய 15 நூற்றாண்டுகளுக்கு இருக்கும்” என்று வார்ஹோல் கணித்தார்.

நான் 1973இல் பிறப்பதற்கு முன்பே பெலே சர்வதேச விளையாட்டுகளில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். ஆனால், பிரேசிலில் வளர்ந்ததால் அவருடைய சாதனைகளைப் பற்றிய கதைகளை மீண்டும் மீண்டும் கேட்பதிலிருந்து தப்பிக்க முடியவில்லை.

ஆனால், பிரேசிலை உலகின் மிக வெற்றிகரமான கால்பந்து நாடாக மாற்ற உதவுவதோடு, கறுப்பின மனிதரான பெலே, இன்னும் குறிப்பிடத்தக்க ஒன்றைச் செய்தார்.

வெட்கக்கேடான அடிமைத்தனமும் பிரிவினை வரலாறும் நீடித்த ஒரு நாட்டின் தேசியப் புதையலாக உயர்ந்து, இன்றும் அந்தப் புகழோடு இருக்கிறார்.

அன்றும் சரி இன்றும் சரி, அவர் மிகவும் பிரபலமான பிரேசிலியன். நியூயார்க்கில் இருந்து துணை-சஹாரா ஆப்பிரிக்கா வரை நான் பயணித்த அனைத்து இடங்களிலும், நான் எங்கிருந்து வருகிறேன் என்பதைக் கூறிய பிறகு எவரும் முதலில் குறிப்பிடும் பெயர் அவருடையதுதான்.

பெலே, நிச்சயமாக விமர்சகர்களையும் கொண்டிருந்தார். 1964, 1985-க்கு இடையில் பிரேசிலை இரும்புக்கரத்துடன் ஆட்சி செய்த ராணுவ ஆட்சிக்கு எதிராக அவர் பேசியிருக்க வேண்டும் என்று நினைத்தவர்களும் இருந்தனர். அந்த ஆட்சியின் தலைவர்கள் தேசிய அணியின் வெற்றியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் வெட்கப்படவில்லை.

அடக்குமுறைகளுக்கு கண்ணை மூடிக் கொண்டிருந்தது பெலே மட்டு மல்ல. ஆனால், அவர்களில் எவருக்கும் அவருக்கு இருந்த அளவுக்கான கவர்ச்சி இருக்கவில்லை.



2021 நெட்ஃப்லிக்ஸ் ஆவணப்படத்தில் ராணுவ ஆட்சி நடந்த காலகட்டத்தில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களில் “கால்பந்து வீரர்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டார்கள்” என்று மன்னிப்பு கேட்கும் தொனியில் பெலே கூறினார்.

“ஜமீறல்கள்ஸ குறித்து எனக்குத் தெரியாது என்று நான் சொன்னால், அது பொய். ஆனால் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று எங்களுக்கு உறுதியாகத் தெரிந்திருக்கவில்லை.”

பிந்தைய ஆண்டுகளில், ராணுவத்திற்கு எதிராக 1974 உலகக்கோப்பையில் விளையாடுவதற்கு சர்வதேச ஓய்விலிருந்து திரும்பி வர மறுத்ததாக பெலே கூறுவார். பெலே விளையாடிய நாட்களிலோ அல்லது ஓய்வு பெற்ற பிறகோ, பிரேசிலில் இனவெறிக்கு எதிரான முறையான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடவில்லை.

2014ஆம் ஆண்டில், பிரேசிலிய சாம்பியன்ஷிப் விளையாட்டில் ஓர் இனவெறி சம்பவத்தை இயல்பாக்கிய பிறகு அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அவர் விளையாடிய நாட்களில், “நான் பங்கேற்ற ஒவ்வொரு விளையாட்டையும் நிறுத்துவதற்கு” போதுமான இனரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகக் கூறினார்.

பெலேவின் தனிப்பட்ட வாழ்க்கை சர்ச்சைகளால் சூழப்பட்டது. போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதற்காக அவருடைய மகன் எட்சன் கைது செய்யப்பட்டார். 1960களின் முற்பகுதியில் ஒரு நெருக்கமான உறவில் பிறந்த மகள் சாண்ட்ராவை அவர் ஒப்புக்கொள்ள மறுத்தார். நெட்ஃப்லிக்ஸ் ஆவணப் படத்தில், பெலே “எனக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் எனத் தெரியாத அளவுக்குப் பல தொடர்புகள்” இருப்பதாக ஒப்புக்கொண்டார்.

1977-ஆம் ஆண்டு அமெரிக்காவின் மோசமான முதல் தொழில்முறை கால்பந்து லீக்கில் விளையாடிய பிறகு பெலே கால்பந்து விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் நிர்வாகத்தின் பக்கமாகச் செல்லவில்லை. மேலும் விளையாட்டின் மீதான அவருடைய ஈடுபாடு பெரும்பாலும் தொலைக்காட்சியில் கருத்து தெரிவிப்பதாக மட்டுமே இருந்தது. 1994ஆம் ஆண்டு பிரேசில் ஆண்கள் பிரிவு அணி உலகக்கோப்பையை வென்றபோது லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள ரோஸ் பவுல் ஸ்டேடியத்தின் பத்திரிகை பேட்டியில் ஹெட்செட் அணிந்தபடி அவர் மேலும் கீழும் குதிக்கும் காட்சி, இன்னும் என் கண்களில் கண்ணீரை வர வைக்கிறது.



அவர் சோப் ஓபராக்கள், எஸ்கேப் டு விக்டரி போன்ற திரைப்படங்களிலும் தோன்றுவார். 1995-98-க்கு இடையில் பிரேசிலின் விளையாட்டுத்துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

பெலே எண்ணற்ற தேசிய, சர்வதேச நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்துள்ளார். இது சில நேரங்களில் கேலிக்கு வழிவகுத்தது. ஆனால், பின்னோக்கிப் பார்த்தால் அதுவொரு துணிச்சலான நடவடிக்கையாகவும் இருந்தது.

பெலே தேசிய, சர்வதேச ஊடகங்களுக்கான மேற்கோள்களுக்கான ஆதாரமாக இருந்தார். பிரபலமான சக ஊழியர்களை வருத்தப்படுத்தினாலும்கூட, அவர் தனது வார்த்தைகளை அதிகம் அளவிடவில்லை.

பிரேசிலின் உலகக் கோப்பையை வென்ற முன்கள வீரர் ரொமாரியோ ஒரு முறை, “பெலே வாயை மூடிக் கொண்டிருந்தால், அவர் ஒரு கவிஞர்” எனக் கூறினார். அவரால் அசாதாரணமான கணிப்பு களையும் கூற முடியும்.

1970களில் ஓர் ஆப்பிரிக்க அணி “21 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு உலகக் கோப்பையை வெல்லும்” என்று கணித்தவர் பெலே. இதை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் அரையிறுதியைக் கூட எட்டவில்லை.

1994ஆம் ஆண்டு அர்ஜென்டினாவை வீழ்த்தி தகுதிச்சுற்றில் கொலம்பியா வெற்றி பெற்ற நேரத்தில் அது உலகக் கோப்பையை வெல்லும் என்றும் அவர் தெரிவித்தது பிரபலமானது. ஆனால், அவர்கள் அமெரிக்காவிடம் தோற்று முதல் சுற்றிலேயே வெளியேறினார்கள்.

பெலேவின் கணிப்புகள் பிரேசில் செய்தியாளர்களிடையே கேலிக்குரியதானது. ‘விளையாட்டில் எனக்குள்ள வரலாறு, என் மனதிலுள்ளதை வெளிப்படையாகப் பேசும் உரிமையை எனக்குக் கொடுக்கிறது’

2006இல் பெர்லினில் நடந்த மற்றோர் அதிசயமான தருணத்தில், “விளையாட்டில் எனக்குள்ள வரலாறு எனக்கு என் மனதைப் பேசுவதற்கான உரிமையை அளிப்பதாக நான் கருதுகிறேன்,” என்று அவர் என்னிடம் கூறினார். ஒரு சொகுசு ஹோட்டலில் அவர் மற்றும் அவருடைய ஊழியர்களுடன் நான் இங்கிலாந்து, ஈக்வடாருக்கு எதிரான ரவுண்ட் ஆஃப் 16 சுற்றுக்கான உலகக்கோப்பையை போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அன்று பிற்பகலில், அவர் அனைத்திற்கும் எதிராகவும், அவரது கருத்தை நியாயமற்ற முறையில் விமர்சித்த அனைவருக்கும் எதிராகவும், டியாகோ மாரடோனா உட்பட, ஒரு முழு விளக்கத்தைப் பேசினார். அதுவொரு சிறப்பான கட்டுரைக்கு வித்திட்டது. ஆனால், அது வெளியுலகுக்கு வரவே இல்லை. ஏனெனில், “நீ இங்கே ஒரு நண்பராக வந்திருக்கிறாய், செய்தியாளராக இல்லை” என்று கிங் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருந்தார்.

கால்பந்து மன்னரை எதிர்ப்பதற்கு நான் யார்? ஆனால், அந்தப் போட்டியின் காலிறுதியில் பிரேசில் பிரான்ஸிடம் தோற்று வெளியேறியபோது, பெலே அளித்த ஒரேயொரு செய்தித்தாள் பேட்டியும் எனக்குத்தான்.

லியோனெல் மெஸ்ஸி கால்பந்து உலகில் வலம் வரத் தொடங்கியதிலிருந்து, உலகின் சிறந்த கால்பந்து வீரராக பெலே வீழ்த்தப்பட்டதாகச் சொல்லிக் கொள்ள பலர் ஆசைப்படுகிறார்கள். ஆனால், பிரேசிலிய ஜாம்பவானின் பார்வையில் அப்படியில்லை.

“என்னால் ஹெட்டர்களை அடிக்க முடியும், இரண்டு கால்களாலும் பந்தைக் கையாள முடியும். மெஸ்ஸி இடது புறத்தையே அதிகம் பயன்படுத்த முனைகிறார். அதோடு அவர் ஆயிரம் கோல்களையும் அடித்தாக வேண்டும்,” என்று என்னிடம் பெலே லண்டனில் கூறினார். (பிபிசி)

# உதைபந்தாட்டத்தின் அரசன் பீலே புற்றுநோயால் காலமானார்!

பிரேஸிலியா, டிசெ. 31

பிரேஸில் 'உதைபந்தாட்ட அரசன்' என்று புகழப்படும் பீலே (வயது82) புற்றுநோய் பாதிப்பால் வியாழக்கிழமை நள்ளிரவு உயிரிழந்தார். இதை யடுத்து அந்த நாட்டில் மூன்று நாள்கள் துக்கம் கடைப்பிடிக் கப்படும் என்று அரசு அறிவித் துள்ளது.

பிரேஸில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ வெளியிட்டி ருக்கும் அறிக்கையில், உதை பந்தாட்ட விளையாட்டு வீரர் பீலேவின் மரணத்தைத் தொடர்ந்து மூன்று நாள்க ளுக்கு நாடு முழுவதும் துக்கம் அனுசரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீலே என்று ரசிகர்களால் அழைக்கப்பட்டு பிரபலம் பெற்ற அவரின் இயற்பெயர் எடிசன் அரான்டஸ் டி நாசி மென்டே என்பதாகும். 1940 ஒக்ரோபர் 23ஆம் திகதி பிறந்த அவர், 1956 செப்ரெம்பர் 7ஆம் திகதி கொரிந்தியன்ஸ் அணிக்கு எதிராக சாண்டோஸ் என்ற அணிக்காக களமிறங்கினார்.

1958ஆம் ஆண்டு அவர் பிரேஸில் தேசிய அணிக்காக அறிமுகமானார். சோவியத் யூனியன் (இன்றைய ரஷ்யா) அணிக்கு எதிராக முதன்முத லாக அறிமுகமானார்.



தொடர்ந்து, உலகக் கிண் ணத் தொடர்களில் பிரேஸி லுக்கு 3 முறை சம்பியன் பட்டம் (1958, 1962, 1970) வென்று தந்த பீலே, கடந்த நூற்றாண் டின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவராகத் திகழ்ந் தார்.

சர்வதேச அரங்கில் பிரேஸி லுக்காக 14 ஆண்டுகள் 92 போட்டிகளில் களம் கண்ட பீலே, அதில் மொத்த மாக 77 கோல்கள் அடித் திருக்கிறார். அதுவே லீக் போட்டிகள் உள் பட மொத்தமாக கணக் கில்கொண்டால் 700 போட்டிகளில் 655 கோல்கள் அடித்து அசத்தியிருக்கிறார்.

உதைபந்தாட்ட ஜாம்பவானான பீலே, கடந்த 1958ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற போட்டியின் மூலம் உல கக் கிண்ண உதைபந் தாட்டத்தில் அறிமுகமானார். அப்போது 17 வயதையே எட்டியிருந்த அவர், உலகக் கிண்ணப் போட்டியில் களம் கண்ட மிக இளவயது வீரர் என்ற சாதனையை படைத்தார்.

உதைபந்தாட்டத்திலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, பிரேஸில் விளையாட்டுத் துறை அமைச் சராக 1995 முதல் 98 வரை பொறுப்பு வகித்திருந்தார்.

உதைபந்தாட்ட விளையாட் டின் அரசனாக வர்ணிக்கப்படும் பீலேவின் மறைவுக்கு உலகமே அஞ்சலி செலுத்துகிறது. (ஐ)

# யாழ்.வீரர் வியாஸ்காந்துக்கு பங்களாதேஷில் ஆட வாய்ப்பு!

கொழும்பு, டிசெ. 31

இடம்பெற்று முடிந்த லங்கா பிறீமியர் லீக் தொடரில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணிக் காக விளையாடிய யாழ். வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் விளையாட வாய்ப்பு கிடைத் துள்ளது.

யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி யில் இளம் வீரரான வியாஸ் காந்த் சுழல்பந்து வீச்சில் 8 ஆட் டங்களில் 13 விக்கெட்களை அசத்தினார். அத்துடன் சிறந்த வளர்ந்துவரும் வீரருக்கான விருதையும் வென்றிருந்தார்.

வியாஸ்காந்த் பங்களாதேஷ் பிறீமியர் லீக் அணியான சிட்டோகிராம் சலஞ்சர்ஸ் அணி யால் 2023ஆம் ஆண்டுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

சிட்டோகிராம் சலஞ்சர்ஸ் அணியில் விஜயகாந்த் வியாஸ் காந்த் மாத்திரமின்றி இலங்கை வீரர்களான விஷ்வ பெர் னாண்டோ மற்றும் அஷான் பிரியன்ஜன் ஆகிய வீரர்களும் ஏற்கனவே இடம்பெற்றுள்ள னர். அதுமாத்திரமின்றி வியாஸ்காந்த் உட்பட மொத்த மாக 14 இலங்கை வீரர்கள்




பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் விளையாடவுள்ளனர்.

எல்.பி.எல். தொடரில் வாய்ப் பினை சரியாக பயன்படுத்திக் கொண்ட வியாஸ்காந்துக்கு வெளிநாட்டு தொடர் ஒன்றில் விளையாட கிடைக்கும் முதல் வாய்ப்பு இதுவாகும். வியாஸ் காந்துக்கு வாய்ப்பு கிடைத்துள்ள போதும், தொடருக்கு செல்வ தற்கான அனுமதி இலங்கை கிரிக்கெட் சபையிட மிருந்து இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

# அவுஸ்திரேலிய ஓப்பனின் பரிசு தொகை அதிகரிப்பு!

மெல்பர்ன், டிசெ. 31

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் டென் னிஸ் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பன் வரும் ஜனவரி 13ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை மெல்பர்ன் நகரில் நடைபெறவுள்ளது.




இந்தத் தொடருக்கான பரிசுத் தொகையை போட்டி அமைப்பாளர் கள் நேற்று அறிவித்தனர். கடந்த ஆண்டைவிட 3.4 சதவீதம் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடரின் மொத்த பரிசுத் தொகை இலங்கை மதிப் பில் சுமார் 1,918 கோடி ரூபாயாகும்.

ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வெல்பவர் தலா 74.5 கோடி ரூபாயை பரிசாக பெறுவார்கள். தகுதி சுற்றுடன் வெளியேறுபவர்களுக்கு 65.2 இலட்சம் ரூபாய் கிடைக்கும்.

அதேவளையில் பிரதான போட்டியில் முதல் சுற்றுடன் வெளியேறுபவர்களுக்கு சுமார் 2.6 கோடி ரூபாய் கிடைக் கும். கடந்த 20 ஆண்டுகளில் அவுஸ்திரேலிய ஓபன் தொட ரின் பரிசுத் தொகை 321 சத வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நெய்மருக்கு சிவப்பு அட்டை; எம்பாப்பே அசத்தல் கோல்!

பாரிஸ், டிசெ. 31

உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் முடிந்த நிலையில், பிரான்ஸ் நாட் டில் லீக் 1 தொடர் மீண் டும் தொடங்கியுள்ளது. இந்தத் தொடரில் பாரிஸ் சென் ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) கழக அணிக்காக விளையாடும் நெய்மர் மற்றும் எம்பாப்பே என இருவரும் களம் திரும்பி யுள்ளனர். வரும் ஜனவரி யில் மெஸ்ஸி இணைய வுள்ளார்.




இந்தச் சூழலில் நேற்று முன்தினம் ஸ்ட்ராஸ்பேர்க் அணியுடன் பி. எஸ். ஜி. அணி விளையாடியது. இந்தப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பி. எஸ். ஜி. எம்பாப்பே உட்பட அந்த அணி சார்பில் இரண்டு பேர் கோல் பதிவு செய்திருந்தனர்.

இந்தப் போட்டியில் சிவப்பு அட்டை வாங்கி வெளியேறினார் நட்சத்திர ஆட் டக்காரர் நெய்மர்.

இந்தப் போட்டியின் 62ஆவது நிமிடத்தில் பெனால்டி பகுதிக்குள் கரணம் அடித்த கார ணத்தால் அவருக்கு சிவப்பு அட்டை கொடுக் கப்பட்டது. அதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்னர் தான் எதிரணியின் வீரரின் முகத்தில் அடித்தி ருந்தார். மீண்டும் தவறான ஆட்டத்தை ஆடிய தால் அவருக்கு சிவப்பு அட்டை கொடுக்கப் பட்டது. அதனால் நடுவருடன் வாதிட்டார். பின்னர் வெளியேறினார். அது களத்தில் பர பரப்பை ஏற்படுத்தியது. (ஐ)

# டில்லியில் கோர விபத்து; ரிஷப் பந்த் படுகாயம்!

புதுடில்லி, டிசெ. 31

இந்திய கிரிக்கெட் அதிரடி வீரரும், விக்கெட் காப்பாளருமான ரிஷப் பந்த் நேற்று வெள்ளிக்கிழமை டில்லியில் கோர விபத்தில் சிக்கினார். படுகாய மடைந்துள்ள அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எனினும், ரிஷப் பந்தின் உடல் நிலை சீராக இருப்பதாகவும், ஆபத்தான நிலை எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பந்த் காரை தானே செலுத்திக் கொண்டு உத்தராகண்டுக்கு சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் கார் தீப் பிடித்து எரிந்தது. எரிந்த காரின் கண்ணாடியை உடைத் துக் கொண்டு பந்த் தப்பினார். விபத்தில் அவர் படுகாயமடைந்தார்.

விபத் தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில், "இன்று (நேற்று) அதிகாலை ரிஷப் பந்த் செலுத்தி வந்த கார் 5:30 மணியளவில் விபத்துக்குள் ளானது.

ரூர்கி அருகில் உள்ள முகமதுபூர் ஜாட் என்ற இடத்தில் இந்த விபத்து நடந்துள்ளது. ரிஷப் பந்த் கூறியதன் படி கார் செலுத்தும்போது அதிகாலை நேரம் என்பதால் சற்றே தூங்கியிருக் கிறார். கண் அசந்த நேரத்தில் கார் கட்டுப்பாட்டை இழந்து சாலைத் தடுப்பில் இடித்து தீப்பிடித்தது.

அதிலிருந்து கண்ணாடியை உடைத்து உயிர் தப்பினார் ரிஷப் பந்த். முதலில் ரூர்கி மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு தற் போது டேராடூன் மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள் ளார்" என்றார்.

கிறிஸ்துமஸ் பண்டி கையை ரிஷப் பண்ட் டுபாயில் தோனி குடும் பத்துடன் கொண்டாடி னார். உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, ரிஷப் பந்த் சிகிச் சைக்கான செலவு முழு தையும் மாநில அரசு ஏற் கும் என்று கூறியுள்ளார்.





இத்தகைய பயங்கரமான விபத்திலிருந்து மீண்டு வந்த ரிஷப் பந்தின் உடல் நிலை விரைவில் குணம டைய வேண்டும் என்று முன்னாள், இந்நாள் வீரர்கள், ரசிகர்கள் மற்றும் கிரிக்கெட் உலகத்தினர் பிரார்த்தனை செய்து வருகின்றனர். (ஐ)

# மோசடி செய்யப்பட்ட நிதியை மீட்டு அரசுடைமையாக்குங்கள்!

## குணவங்ஸ தேரர் பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 31

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நாட்டு மக்களை வதைக்கும் வகையில் வரி அதிகரிப்பதை விடுத்து, மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடமையாக்குங்கள் என தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ஸ தேரர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் வலியுறுத்தினார்.


மின்கட்டணத்தை அதிரகித்தால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். மக்கள் படும் துயரத்தை உணர்வு பூர்வமாக சிந்தியுங்கள் எனவும் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிடும் கருததுக்கள் வெறுக்கத்தக்கதாகவும், மக்களின் வெறுப்பை தீவிரப் படுத்துவதாகவும் உள்ளது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நாட்டு



மக்களை வதைக்கும் வகையில் வரி அதிகரிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு நாட்டு மக்கள் பொறுப்பு கூற வேண்டிய தேவை இல்லை. அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகளும்,அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதை விடுத்து மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடமையாக்கும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்தால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

கடந்த ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் எனது விகாரையின் ஒருமாத மின்கட்டணம் 10 ஆயிரம் அளவில் இருந்தது, ஆனால் தற்போது ஒருமாத மின்கட்டணம் 48 ஆயிரம் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இந்த மின்கட்டணத்தை நாங்கள் எவ்வாறு செலுத்துவது. மின்கட்டணம் அதிகரிப்பு என்பதால் விகாரைகளை இருளில் வைக்க முடியுமா,

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில் மின்கட்டணத்தை அதிகரித்தால் சமூக கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்படும்.ஆகவே மக்கள் தொடர்பில் அரசாங்கம் உணர்வு பூர்வமாக சிந்திக்க வேண்டும் - என்றார்.

# இந்தியாவின் அரிசி மூடை பதுக்கல் தகவல் கோரினார் செல்வம் எம். பி.!

மன்னார், டிசெ. 31

இந்தியாவின் தமிழக அரசி னால் இலங்கை மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட அரிசி மூடைகள் தொடர்பில் தகவல் கோரி வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வவுனியா அரசாங்க அதிபருக்கு கடித மொன்றை அனுப்பி வைத்துள் ளார்.



அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக அரசாங்கத்தால் இலங்கை மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட அரிசி மூடைகள் பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் அறிந்தேன். இந்த விடயத்தின் உண்மைத் தன்மையை அறிவதற்கு தான் ஆவலாக உள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி நிதியம் மூலமான மருத்துவ நிதியுதவி அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 31

இந்த வருடம் ஜனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவ உதவிக்காக 1,500 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜனாதிபதி நிதியத்துக்கு கிடைத்த 11 ஆயிரம் விண்ணப்பங்களில் 10 ஆயிரத்து 360 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் பூர்த்தி செய்யப்படாத எஞ்சிய 642 விண்ணப்பங்கள் தொடர்பான பணப்பரிமாற்றங்கள் எதிர்வரும் சில வாரங்களில் பூர்த்தி செய்யப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளை வழங்கும்போது தற்போது வழங்கப்படும் உதவிகளை அதிகரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்க விசேட மருத்துவர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் பரிந்துரைகள் கிடைத்ததும்

மருத்துவ உதவித் தொகையை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

கல்வி tv CHANNEL-1

**31.12.2022**

**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**31.12.2022**

**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவரின் திருமணம் தடை!

## விண்ணப்பத்தை நிராகரித்தது பள்ளிவாசல்

அம்பாறை, டிசெ.31

**போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட நபர் ஒருவரின் திருமணத்திற்கான சமய அங்கீகாரத்தை அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிராகரித்துள்ளது.**

அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் பிரதேசத்திற்குள் வசித்து வரும் நபர் ஒருவரின் திருமணத்தை நடத்தி வைக்குமாறு ஜும்மா பெரிய பள்ளிவாசலுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

குறித்த விண்ணப்பத்தை பரீசீலனைக்காக எடுத்துக் கொண்ட ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை குறித்த நபர் போதைப் பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்டவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனவே திருமண சடங்கை நிறைவேற்றி வைப்பதை தவிர்த்துள்ளதுடன் குறித்த விண்ணப்பத்தையும் நிராகரித்துள்ளது.

அத்துடன் குறித்த திருமணத்திற்கான மணமகனை போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்தில் அனுமதிப்பதுடன் அங்கிருந்து நற்சான்றிதழ் பத்திரம் பெற்று மீண்டும் பள்ளிவாசலில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறித்த இவ்விடயம் சமூக ஊடகங்களில் முக்கிய பேசு பொருளாக மாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# களுவாஞ்சிக்குடியில் சமாதான ஒளிவிழா

அம்பாறை, டிசெ. 31

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒளி விழா நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

அருட்பணி ஜே. மார்சல், அருட்திரு ஐ. அமலதாஸ் ஆகியோரின் ஆசிச்செய்தியுடன் ஆரம்பமான இந் நிகழ்வினை தொடர்ந்து மாணவர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து நத்தார் தாத்தா வருகையும், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசு வழங்கலும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மல்ராஜ், நிர்வாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், முகாமைத்துவ பணிப்பாளர் கே உதயகுமார், மேலதிக மாவட்ட பதிவாளர் அ. பேரின்பநாயகம் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கேரளக் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

அம்பாறை, டிசெ. 31

கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய வியாழக்கிழமை இரவு இக்கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிநடத்தலில் விடுமுறையில் இருந்த கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கல்முனை மஹ்மூத் பெண்கள் பாடசாலைக்கு அருகில் வைத்து கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளை சூட்சுமமாக கொண்டு சென்ற 35 வயதான சந்தேக நபரை கைது செய்தனர்.

மேலும் கைதான சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் 6 கிராம் 680 மில்லி கிராம் உட்பட கேரளக் கஞ்சா 1 கிராம் 900 மில்லி கிராம் 29700 ரூபா பணம், ஒரு கைத் தொலைபேசி உள்ளிட்டவை கள் கல்முனை தலைமையக பொலிஸாரினால் மீட்கப்பட்டன. (அ)

# 5இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்

அம்பாறை, டிசெ. 31

நாடு பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட நிலையில், கல்முனை றோட்டறிக் கழகம் கஷ்டப் பிரதேச தமிழ், முஸ்லிம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றது.



கழக வேலைத்திட்டத்தின் 5 ஆம் கட்ட நிகழ்வாக பொத்துவில் பிரதேசத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு 387, 560 ரூபா பெறுமதியான அப்பியாசக்கொப்பிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

கழகத்தின் தலைவர் றோட்டரியன் வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்செயலாளர் றோட்டரியன் மு.சிவபாத சுந்தரம் முன்னாள் தலைவர் றோட்டரியன் எஸ். புஷ்பராஜா உறுப்பினர் றோட்டரியன் நாசர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொத்துவில் சரஸ்வதி வித்தியாலயம், ஹறணி வித்தியாலயம், றொட்டை அ.த.க.பாடசாலை, பொத்துவில் விபுலானந்த வித்தியாலயம், செங்காமம் அல்மினார் வித்தியாலயம், மணற்சேனை அ.த.க. பாடசாலை போன்ற பாடசாலை மாணவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

நெருக்கடி மிகுந்த இன்றைய சூழலில் இவ் உதவி மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதம் என்று குறித்த பாடசாலை அதிபர்கள் நன்றி தெரிவித்தனர்.

இதேவேளை, ஏலவே கல்முனை றோட்டரி கழகம் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளை வழங்கியது.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆயிரம் அப்பியாச கொப்பிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்முனை கல்வி வலயத்தின் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

அம்பாறை, டிசெ. 31



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா நிறுவன அனுசரணையுடன் கல்முனை கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதானம் மற்றும் விழுமிய கல்வி, தொடர்பாக மாணவர்களுக்கு மத்தியில் அடுத்த ஆண்டில் சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நேற்று முன் தினம் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய மண்டபத்தில் கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம். அப்துல் மலீக் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகவும், வளவாளராகவும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கலந்து கொண்டு ஆசிரியர்களைப் பயிற்றுவித்தார்.

இப்பயிற்சிப் பட்டறையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம்.அஸ்லம் சஜா, பிரதான வளவாளராகக் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கினார். குறித்த பயிற்சி பட்டறையில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ. ஜிஹானா ஆலிவ், உதவிக் கல்விப் பணிப்பாளர் அஸ்மா மலீக் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். (அ)

## நீதிமன்ற கட்டடத்துக்கு தீ:

# கைதான மூவரையும் தடுப்பில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி

அம்பாறை, டிசெ. 31

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தீ வைத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள அக்கரைப்பற்று பதில் நீதவான் கே.சமீம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சந்தேக நபர்கள் அக்கரைப்பற்று பதில் நீதவான் கே.சமீம் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் 7 நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

அக்கரைப்பற்றை சேர்ந்த 24 வயதான இருவரும் 18 வயதான ஒருவரும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் பெரிய நீலாவணை சுனாமி வீட்டுத்திட்டத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒருவரிடம் பணம் பெற்றுக் கொண்டு, நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தீ வைத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், ஒப்பந்தத்தை வழங்கிய நபரைக் கண்டறியும் நோக்கில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் அம்பாறை குற்றவியல் பிரிவு பொலிஸாரின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீதவான் நீதிமன்ற அலுவலக கட்ட டத் தொகுதியில் தீ வைக்கப்பட்டமை தொடர்பில், பல குழுக்களை அமைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 1,080,000 கடவுச்சீட்டுகள் வழங்கியது அயர்லாந்து




டப்ளின், டிசெ. 31

2022ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான அயர்லாந்து கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன என்று அயர்லாந்து வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த 12 மாதங்களில் சுமார் 1,080,000 அயர்லாந்து கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன.

இது 2019ஆம் ஆண்டு முந்தைய சாதனையான 935,000ஐ முறியடித்தது.

நவம்பர் மாதம் கடவுச்சீட்டுகள் சேவை முதல் முறையாக ஆண்டுக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான கடவுச்சீட்டுகளை வழங்கியதாக அறிவித்தது.

வடக்கு அயர்லாந்து மற்றும் பிரித்தானியாவில் இருந்து பெறப்பட்ட முதல் முறை விண்ணப்பங்களின் எண்ணிக்கை சுமார் 100,000 ஆகும்.

அயர்லாந்து கடவுச்சீட்டுக்கு மிகவும் பழமையான விண்ணப்பதாரர் 102 வயதுடையவர். அதேபோல இளையவர் மூன்று நாட்கள் கொண்ட குழந்தை. (அ)

# ஆங் சான் சூகிக்கு மேலும் 7 ஆண்டு சிறை தண்டனை!

## இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு



நைபிட்டோ, டிசெ. 31

இராணுவத்தால் ஆளப்படும் மியன்மாரில் உள்ள நீதிமன்றம், பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைவர் ஆங் சான் சூகியை ஐந்து ஊழல் குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என்று நேற்று வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

அவருக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இத்துடன் அவருக்கு எதிரான கடைசி வழக்குகளை முடித்து வைத்தது.

மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடைபெற்ற நீதிமன்ற அமர்வில், சூ கி, மியான்மரின் தலைவராக இருந்தபோது ஹெலிகொப்டரை குத்தகைக்கு எடுத்தது மற்றும் பயன்படுத்தியது தொடர்பான குற்றங்களில் குற்றவாளி என தீர்ப்பளித்தது.

மியன்மாரில் பெப்ரவரி 2021 இல் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து, இராணுவ ஆட்சி அமலானது. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சூகி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

மியன்மாரில் ஜனநாயகத்துக்கான பல தசாப்த காலமாக போராடி அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற சூ கி, தனது அரசியல் வாழ்க்கையின் பெரும்பகுதியை இராணுவ அரசாங்கங்களின் கீழ் சிறையில் கழித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் முதல் அவருக்கு பல்வேறு வழக்குகளில் 26 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது. மேலும் ஏழு ஆண்டுகள் சிறையில் அடைக்க நீதிபதி வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மியான்மரின் 49 ஆண்டு கால இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து, ஒரு தசாப்த கால தற்காலிக ஜனநாயக ஆட்சி நிலவிய சமயத்தில், 2015 முதல் ஐந்து ஆண்டுகள் மியன்மாரை சூ கி வழிநடத்தினார். சூ கியின் அரசாங்கத்தை இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்குவதைத் தடுக்க கடந்த ஆண்டு தொடக்கத்தில் இராணுவம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது.

அவர் ஏற்கனவே கடந்த 13 மாதங்களில் பலவிதமான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டுள்ளார், இவை அனைத்தும் அபத்தமானது என்று அவர் விவரித்தார்.

கோவிட்-19 கட்டுப்பாடுகளை மீறுதல், ரேடியோ கருவிகளை சட்டவிரோதமாக வைத்திருப்பது, அரச இரகசிய சட்டத்தை மீறுதல் மற்றும் நாட்டின் தேர்தல் ஆணையத்தில் செல்வாக்கு செலுத்த முயற்சி செய்தல் ஆகியவை குற்றங்களில் அடங்கும். (அ)

# இந்தியப் பிரதமர் மோடியின் தாய் ஹீராபென் காலமானார்!



புதுடில்லி, டிசெ. 31

பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் மோடி காலமானார்.

வயது முதிர்வு (வயது 100) காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவால் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள மேத்தா இதய சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அவர் கடந்த 28ஆம் திகதி அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பிரதமர் மோடி மருத்துவமனைக்கு சென்று தனது தாயார் ஹீராபெனின் உடல்நிலை குறித்து கேட்டறிந்தார். அவரது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று காலை அவர் காலமானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமது தாயார் காலமானதாக பிரதமர் மோடி தமது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த குஜராத் தேர்தலில் பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் சக்கர நாற்காலியில் வந்து வாக்களித்துச் சென்றது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹிஜாப் அணியாமல் போட்டியில் பங்கேற்றார் ஈரான் வீராங்கனை!



அல்மாட், டிசெ. 31

சர்வதேச செஸ் போட்டியில் ஹிஜாப் அணியாமல் பங்கேற்ற ஈரானிய பெண் வீராங்கனை ஒருவர் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கஜகஸ்தானின் அல்மாட்டியில் நடைபெற்ற சர்வதேச செஸ் கூட்டமைப்பு உலக ரேபிட் மற்றும் பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் 25 வயதான சரசாதத் கதேமல்ஷாரி தலையில் ஹிஜாப் இல்லாமல் காணப்பட்டதை அடுத்து ஈரானின் செஸ் கூட்டமைப்பு புதன்கிழமை கருத்து தெரிவித்தது.

செப்ரெம்பரில் 22 வயதான மஹ்சா அமினி காவலில் இறந்ததைத் தொடர்ந்து, ஈரானிய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவாக சரசாதத் கதேமல்ஷாரி ஹிஜாப் அணியாமல் போட்டியில் பங்கேற்றிருக்கலாம் என கருதப்படுகிறது.

"இந்த செஸ் வீரர் சுதந்திரமாகவும் தனது சொந்த செலவிலும் பங்கேற்றார்", ஈரானின் செஸ் கூட்டமைப்பின் தலைவர் ஹசன் தாமினி தெரிவித்ததாக, ஃபார்ஸ் செய்தி நிறுவனம் கூறியது.

"கதேமல்ஷரீஹ் கூட்டமைப்பு மூலம் இந்தப் போட்டிகளில் பங்கேற்கவில்லை, மாறாக சுதந்திரமாகச் சென்று இந்தச் செயலைச் செய்தார்" என்று அவர் மேலும் கூறினார்.

ஈரானிய பெண் விளையாட்டு வீராங்கனைகள் சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்கும்போது தலையை மறைப்பது உள்ளிட்ட இஸ்லாமிய சட்டங்களின்படி ஈரானின் கடுமையான ஆடைக் குறியீட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஈரானிய சதுரங்க வீராங்கனைகள் சாரா காடெம், அடௌசா பூர்காஷியன் ஆகியோர் விளையாடும் போது ஹிஜாபை அணிவதில்லை

கதேமல்ஷாரியின் செயலால் தாங்கள் அதிர்ச்சியடைந்ததாக தாமினி கூறினார்.

"இந்த செஸ் வீராங்கனை இதைச் செய்வார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை, ஏனெனில் அவர் முந்தைய போட்டிகளில் தரத்திற்கு இணங்க பங்கேற்றார்", என்று தாமினி கூறினார்.

சர்வதேச செஸ் சம்மேளன இணையதளத்தின்படி, கதேமல்ஷாரி உலக தரவரிசையில் 804ஆவது இடத்தில் உள்ளார்.

ஹிஜாப் அணியாமல் சர்வதேச போட்டியில் பங்கேற்ற முதல் பெண் தடகள வீராங்கனை இவர் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் மாதம், ஸ்பீட் ஸ்கேட்டர், நிலோஃபர் மர்தானி, துருக்கியில் நடந்த போட்டியில் தலையில் முக்காடு இல்லாமல் கலந்து கொண்டதற்காக அதிகாரிகளால் தண்டிக்கப்பட்டார். (அ)

# நீண்ட இழுபறிக்கு பின்னர் மீண்டும் இஸ்ரேல் பிரதமரான நெத்தன்யாகு!



ஜெருசலேம், டிசெ. 31

இஸ்ரேலின் வரலாற்றில் மத மற்றும் மிகவும் கடுமையான அரசாங்கம் பதவியேற்றுள்ளது.

நீண்ட இழுபறிக்கு பிறகு இஸ்ரேலின் பிரதமராக ஆறாவது முறையாக பெஞ்சமின் நெத்தன்யாகு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பதவியேற்றார்.

73 வயதாகும் அவர், நாட்டில் மிக நீண்ட காலமாக பிரதமராக இருந்தவர் என்ற பெருமையை ஏற்கனவே பெற்றுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேல் பாராளுமன்றத் தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், அமைக்கப்பட்ட அரசாங்கங்கள் அடுத்தடுத்து கவிழ்ந்தன. இந்த நிலையில், மூன்றே ஆண்டுகளில் 4ஆவதாக கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் நெதன்யாகுவின் கட்சிக்கு 32 இடங்கள் கிடைத்தன.

ஆட்சிமைக்க 61 இடங்கள் தேவையான நிலையில், பெஞ்சமின் நெதன்யாகு தனது லிகுட் கட்சி தீவிர தேசியவாத மற்றும் தீவிர ஆர்த்தடாக்ஸ் யூத கூட்டாளிகளுடன் ஒரு கூட்டணியை உருவாக்கிய பின்னர், தற்போது பிரதமராகியுள்ளார்.

தற்போது அமைந்துள்ள அரசாங்கம்தான் நாட்டின் மிகத் தீவிர வலதுசாரிக் கூட்டணி அரசாங்கம் என்று கூறப்படுகிறது. எனவே, இந்த புதிய அரசாங்கம் எடுக்கக் கூடிய முடிவுகள் சர்ச்சையை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

இது பலஸ்தீனியர்களுடனான மோதலைத் தூண்டிவிடும், நீதித்துறையை சேதப்படுத்தும் மற்றும் சிறுபான்மை உரிமைகளை கட்டுப்படுத்தும் என்று உள்நாட்டு மற்றும் சர்வதேசம் கவலை கொண்டுள்ளது.

ஆனால், நெத்தன்யாகு அமைதியைத் தொடரவும், சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

ஜெருசலேமில் நடைபெற்ற பாராளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் உரையாற்றிய அவர், தனது நிர்வாகம் இஸ்ரேல் குடிமக்களுக்கு ஆட்சி, அமைதி மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பை மீட்டெடுக்கும் என்று கூறினார்.

லஞ்சம், மோசடி மற்றும் நம்பிக்கை மீறல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் விசாரணையில் இருக்கும் போது, அதிகமான தாராளவாதிகள் அவருடன் அரசாங்கத்தில் அமர மறுப்பதால், அவர் கடும்போக்குக் கட்சிகளுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட நிர்ப்பந்திக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

# சாதனைத் தமிழன் 2022 விருது பெறும் பெருந்தகை

எழுத்துக்கள் எப்போதும் வரலாற்றை வாழச்செய்வன. ஓர் எழுத்தாணி முனையால் பல சமூக மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியும் என்பதற்கான சான்றாதாரங்கள் பலவுண்டு. இலங்கையில் தமிழர்கள் ஆதிக்குடிகள் என்பதை தனது எழுத்துக்களாலும், ஆய்வுகளின் சான்றாதாரங்களாலும் நிறுவிய பெருமைக்குரியவரும், தமிழையும், இந்து மதத்தையும், அவற்றின் தொன்மைகளையும் நிறுவும் பணிக்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்தவருமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர், வரலாற்றுத்துறை மூத்த பேராசிரியர் சி.பத்மநாதனுக்கு, டான் குழுமம் இவ்வருடத்திற்கான சாதனைத் தமிழன் விருதை வழங்கிக் கௌரவிப்பதில் பெருமிதம் கொள்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தரும், வரலாற்றுத்துறை மூத்த பேராசிரியருமான சி.பத்மநாதன் அவர்கள், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கிழக்கு சங்கரத்தையில், சிவசுப்ரமணியம்-சிவபாக்கியம் தம்பதிகளுக்கு, 1940ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி புதல்வனாகப் பிறந்தார். தனது சிறுவயதில் யாழ்ப்பாணம் அராலி தெற்கு வட்டுக்கோட்டையில் வாழ்ந்த அவர், தனது ஆரம்பக் கல்வியை அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலையில் கற்றிருந்த நிலையில், உயர்கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றார்.

தொடர்ந்து பேராதனைப்பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட பேராசிரியர், அப்பல்கலைக்கழத்திலேயே நிரந்தரமான உதவி விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டார். 1966ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற அவர் தனது விருப்பத்திற்கேற்ப யாழ்ப்பாண இராஜ்ஜியத்திற்குரிய வரலாற்றைக் கற்று ஆய்வுநூல் எழுதி அங்கு கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1986ஆம் ஆண்டு வரலாற்றுத்துறைப் பேராசிரியராக நியமனம் பெற்ற பேராசிரியர், தமிழின இருப்புக்கான பல ஆக்கபூர்வ முயற்சிகளை முன்னெடுத்திருந்தார்.

நாட்டின் பல பிரதேசங்களிலும் தமிழ் பிராமி எழுத்துக்களுடன் காணப்படும் கல்வெட்டுக்களைப் படித்தறிந்து, அவை குறிப்பிடும் விடயங்களை ஆவணப்படுத்த விரும்பிய அவர், தமிழ் பிராமி எழுத்துக்களைப் போதிப்பதற்கான ஆசிரியர்கள் இலங்கையில் இல்லாத நிலையில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அப்போதைய பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசனுக்கு இது குறித்து ஆலோசனை வழங்கி, அதற்கான பயிற்சி வகுப்புக்களை ஆண்டுதோறும் நடாத்தி எழுத்தறிவிக்க ஆவன செய்தார். இதனையடுத்து சென்னையிலுள்ள முதுநிலை ஆய்வாளர்களைக் கொண்டு, பயிற்சிப் பட்டறையை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தியிருந்த நிலையில், அதனூடாக தானும் அவ்வெழுத்துக்களைக் கற்றுக்கொண்டார். 2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராக நியமிக்கப்பட்ட மூத்த பேராசிரியர் பத்மநாதன், 5 வருடங்களின் பின்னர் 2019ஆம் ஆண்டில் மீளவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டு இப்போதும் கௌரவ பதவியில் தொடர்கிறார்.

120 ஆங்கிலக் கட்டுரைகள் உள்ளடங்கலாக 200 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் மற்றும் சுமார் 35 நூல்களை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் எழுதியுள்ள வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன், அக்கட்டுரைகளிலும், நூல்களிலும் இலங்கை வரலாறு, தென்னிந்திய வரலாறு, இலங்கையில் இந்து சமயம், இந்திய துணைக்கண்டத்தில் இந்துப் பண்பாட்டு வரலாறு, அவற்றில் கட்டடம், சிற்பம், ஓவியம், நடனம் உள்ளடங்கலான விடயங்கள் பற்றியும், அதன் வரலாறு மற்றும் தொன்மை பற்றியும் பதிவுசெய்திருக்கிறார். இவற்றில் விசேடமாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 12 தொகுதிகளாக வெளியிடப்பட்ட இந்து கலை களஞ்சியத்தை, முதன்மை ஆசிரியராக இருந்து வெளியிட்டு வைத்தார்.



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேவையிலிருந்து இளைப்பாறிய காலத்தின் பின், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 7 வருடங்கள் வரலாறு போதித்த பேராசிரியர் சி.பத்மநாதன், அப்பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையை நிறுவிய பெருமைக்குரியவராவார். அதேவேளை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்தையும் போதித்த அவர் அங்கு இந்து நாகரிகத்துறை உருவாவதற்கும் வித்திட்டவர் என்றால் மிகையாகாது. இக்காலப்பகுதியின்போது இலங்கை - தமிழக வரலாற்றில் இருந்த ஈடுபாட்டினால் தமிழ் பிராமி எழுத்துக்களை அதிகம் பயன்படுத்தி, கிழக்கிலங்கையில் காணப்பட்ட மலைகளிலும், கல்வெட்டுக்களிலும் பொறிக்கப்பட்டிருந்த தமிழ் பிராமி எழுத்துக்களை வாசித்து அதன் தொன்மை குறித்து பேராசிரியர் கட்டுரை எழுதினார். கிழக்கிலங்கையிலுள்ள ஓரிரு கல்வெட்டுக்கள் குறித்து அவர் எழுதிய கட்டுரை அங்கு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வரலாற்றுத்துறை மூத்த பேராசிரியர் கே.எம்.டி.சில்வா, ‘வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் இல்லை’ ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு செவ்வி வழங்கியிருந்த நிலையில், அதனை மறுதலித்து ஆணித்தரமாக சான்றாதாரங்களுடன் மீள் செவ்வி வழங்கிய மூத்த பேராசிரியர் சி.பத்தமநாதனின் சேவை அப்போது பல மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இல்லாத புனைகதைகளை நவீன காலத்து வரலாற்று ஆசிரியர்களும், ஐரோப்பியர்களும் உருவாக்கி போதித்த வந்திருந்த நிலையில், அது ஆழமாக சமுதாயத்தில் பதிந்துவிட்டிருந்த காலப் பகுதியில்தான், பேராசிரியர் சி.பத்மநாதனின் ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களும் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி உண்மைகளை நிலைநிறுத்தின.

தமிழர்களின் தொன்மை குறித்த பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்திற்கு சான்றாதாரங்களாக பேராசிரியர் சி.பத்மநாதனின் ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் அமைந்தன என்றால் அது மிகையாகாது. அண்மையில்கூட பேராசியர் சி.பத்மநாதனின், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆய்வு நூல்கள்’ தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இவற்றில் திருக்கோணேஸ்வரம் குறித்த ஆய்வு நூல் சமகாலத்தில் திருக்கோணேஸ்வரத்தினுடைய வரலாற்றை நிறுவக்கூடிய பெரும் சான்றாதார நூலாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்து சமயம், தமிழாராய்ச்சி, வரலாறு, கல்வியியல் ஆகிய துறைகளில் சிறப்பான பணியாற்றியமையைக் கௌரவித்து, பேராசிரியருக்கு பல விருதுகளும், பட்டங்களும் வழங்கப்பட்டன. இலங்கையில் இந்து சமயம் என்ற நூலுக்கு தமிழ்நாடு அரசு உயர் விருது வழங்கிக் கௌரவித்த அதேவேளை அவரது மேலும் பல நூல்களுக்கும் இலங்கை அரசாங்கத்தின் விருதுகளும் கிடைத்தன. 2002ஆம் ஆண்டு, இந்தியா தமிழ்நாடு தொல்பொருள் இலாகா, மதுரை பல்கலைக்கழகம், திருவாவூர் பல்கலைக்கழகம், இலங்கையில் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பவற்றைச் சேர்ந்த அறிஞர்கள் கூட்டாக இணைந்து பேராசிரியருக்கு ‘பத்மம்’ என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தனர். அதே ஆண்டில் வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களில் வாழும் தமிழர்கள் பற்றிய இலங்கைத் தமிழர் தேச வழமைகள் குறித்த ஆய்வுக்காக இலங்கை சாகித்திய மண்டலம் ‘சாகித்திய இரத்தினா’ விருது வழங்கியது. மீண்டும் அதே ஆண்டில் இலங்கைத் தமிழர் தேச வழமைகள் குறித்த அதே ஆய்வுக்காக ‘சம்பந்தர் விருது’ வழங்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு ‘INTERNATIONAL BIBLIOGRAPHY INTELECTUAL’ விருதினை லண்டன் கேம்பிரிட்ஜ் BIBLIO ASSOCIATION வழங்கிக் கௌரவித்தது. 2006ஆம் ஆண்டு பேராசிரியரின் ‘இலங்கையில் இந்து சமயம்’ என்ற ஆய்வு நூலைப் பாராட்டி ‘தமிழ்நாடு அரசு விருது’ வழங்கிக் கௌரவித்தது.

> தமிழர்களின் தொன்மை குறித்த பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்திற்கு சான்றாதாரங்களாக பேராசிரியர் சி.பத்மநாதனின் ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் அமைந்தன என்றால் அது மிகையாகாது. அண்மையில்கூட பேராசியர் சி.பத்மநாதனின், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆய்வு நூல்கள்’ தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

2008ஆம் ஆண்டில், தமிழியல் பற்றிய ஆய்வுக்காக முதன் முதலாகத் தமிழர் ஒருவருக்குக் ‘பேராசிரியர் செல்வநாயகம் விருது’ கிடைத்தது. அந்த விருதையும் பேராசிரியர் சி.பத்மநாதனே பெற்றுக்கொண்டார். பேராசிரியருக்கு முன்னதாக குறித்த விருதைப் பெற்றுக் கொண்டிருந்த இருவரும் ஆங்கிலேயர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2013ஆம் ஆண்டில் ஆசிய மரபுரிமைக்கான சர்வதேச சங்கத்தினால் ‘நீலகண்ட சாஸ் திரி விருது’ பேராசிரியருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அதே ஆண்டில் மரபுரிமை முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட ‘உறும பிரசாத பிரணாம’ விருதையும் அவர் பெற்றுக்கொண்டார். 2016ஆம் ஆண்டு இலங்கை கட்டடக் கலை, சிற்பக் கலை பற்றிய ஆய்வுகளுக்காக கலாசார அமைச்சு அவருக்கு ‘தேச நேத்திரா’ என்ற விருதை வழங்கியது. 2017ஆம் ஆண்டு இந்தியாவின் கல்யாண சுந்தரம் நிறுவகத்தினால் “BECON OF BRILLIANCE AND TITLE OF EXCELLENCE” என்ற விருதும் பேராசிரியருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு அறிவியல் ஆய்வுக்கான ஜனாதிபதி விருதான ‘லங்கா சிகாமணி’ விருதையும் பேராசிரியர் பெற்றுக்கொண்டார். 2017ஆம் ஆண்டு, “SESTSCHRIFT CHRIFT FOR PROFESSOR S.PATHMANATHAN” என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், கல்விமான்கள், ஆய்வாளர்களினால் முற்றிலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 600 பக்கங்களைக் கொண்ட பவளவிழா மலரில் பேராசிரியரின் சேவைகளும், சிறப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பெருமைமிகு மூத்த பேராசிரியருக்கு ‘சாதனைத் தமிழன்’ விருதை இவ்வருடம் வழங்குவதில் நாம் பெருமையடைகிறோம். கடந்த 2018ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட சாதனைத் தமிழன் விருதானது, சைவத்தையும், தமிழையும் வளர்த்து, பல சமூக சேவைகளை ஆற்றிவரும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகனுக்கு முதன் முதலில் வழங்கி வைக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத்தை ஸ்தாபித்து முத்தமிழ் வளர்ச்சிக்கு அரும்பங்காற்றியமைக்காக கலாநிதி அருட்திரு மரிய சேவியர் அடிகளாருக்கு வழங்கிவைக்கப்பட்ட இவ்விருது, 2020ஆம் ஆண்டு, கிழக்கிலங்கையில் இசை நாடகம், கிராமியக் கலைகள் மற்றும் இலக்கியத்துறை வளரச்சிக்கு அரும்பங்காற்றிக்கொண்டிருக்கும் பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு, யுத்த வடுக்களைச் சுமந்து மீண்டெழுந்து சுயதொழில் முயற்சியாளராக உருவெடுத்து பல பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்து வெற்றிகண்ட பெண் சாயிராணிக்கு இவ்விருது வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

‘சாதனைத் தமிழன்’ விருதுக்குழு சார்பில்
**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்**

## பிரதான நகரங்களில் 55 ரூபாவுக்கு முட்டை

கொழும்பு, டிசெ. 31

கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி நேற்று 55 ரூபாவிற்கு முட்டை விற்பனை செய்யப்பட்டதாக முட்டை சங்கங்கள் தெரிவித்தன.

அந்த மாவட்டங்களின் முக்கிய நகரங்களை மையமாக வைத்து இந்த வேலைத்திட்டம் நேற்று அமுல்படுத்தப்பட்டதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் கடந்த 28ஆம் திகதி கொழும்பு மற்றும் கம்பஹாவில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சந்தையில் முட்டையின் விலை 65 ரூபாவாக அதிகரித்துள்ளதை கருத்திற்கொண்டு, நுகர்வோருக்கு குறைந்த விலையில் முட்டையை விற்பனை செய்யும் திட்டத்தை விவசாய அமைச்சு முன்மொழிந்ததையடுத்து, முட்டை உற்பத்தியாளர்கள் இந்த திட்டத்தை நடை முறைப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அகில இலங்கை கோழிப்பண்ணை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர, முட்டை தேவைக்கு போதியளவு விநியோகத்தை வழங்க முடியாவிட்டாலும் தற்காலிகமாக இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக தெரிவித்தார். (அ)

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் அரசியல்வாதிகளின் தகவல் தாருங்கள்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கோரிக்கை



கொழும்பு, டிசெ. 31

இலங்கைக்குப் போதைப் பொருட்களை உயர்மட்ட அரசியல்வாதிகளே கொண்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படும் பின்னணியில், இதற்கு ஆதாரங்களைத் தந்தால் குறித்த அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

'இலங்கையில் மிகப்பெரிய போதைப்பொருள் வர்த்தகத்துக்குப் பின்னால் பாராளுமன்றத்திலுள்ள உயர்மட்ட அரசியல்வாதிகள் உள்ளனர்' என்று ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பில் நீதி அமைச்சரிடம் வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அது பற்றி எனக்குத் தெரியாது. இதை யார் செய்தாலும் பிழைதான். அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இலங்கைக்குப் போதைப் பொருள்களை அரசியல்வாதிகளே கொண்டு வருகின்றார்கள் என்பதற்குச் சரியான தகவல்களை - ஆதாரங்களை எம்மிடம் தந்தால் அவர்களுக்கு எதிராக நிச்சயம் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். அவர்கள் சக பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதற்காக அவர்களுக்குச் சார்பாக நடக்கமாட்டேன். இதை வரலாற்றில் நான் நிரூபித்துக் காட்டியுள்ளேன்.

2007ஆம் ஆண்டில் நான் கோப் குழுவின் தலைவர். அப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் ஊழலை அந்தக் குழுவின் அறிக்கையின் ஊடாக பாராளுமன்றில் அம்பலப்படுத்தினேன்.

நான் நினைத்திருந்தால் எனது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களைக் காப்பாற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களை மாத்திரம் குற்றஞ்சாட்டி இருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

இரு தரப்பிலும் உள்ள குற்றவாளிகளை அடையாளம் காட்டினேன். அதனால்தான் இரு தரப்பும் சேர்ந்து என்னைத் தாக்க முற்பட்டனர். அதற்கு முன் நான் எதிர்க்கட்சிக்குத் தாவிவிட்டேன்-என்றார். (அ)

# வெளியேறும் அரச ஊழியர்களினால் நிறுவனங்களில் பதவி போர் தீவிரம்!

கொழும்பு, டிசெ. 31

அரச ஊழியர்களின் ஓய்வு வயதை 65 இல் இருந்து 60 ஆக குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததன் காரணமாக இந்த வருடத்தின் கடைசி இரண்டு வேலை நாட்களில் அரச நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், பல நிறுவனங்களில் பதவிகளுக்கு கடும் போட்டி நிலைமை ஒன்று ஏற்பட்டதாக தகவல் வெளியானது.

மேலும் சில நிறுவனங்களில் முதியவர்கள் இருந்த இருக்கைகளில் அடுத்தடுத்து அதிகாரிகள் வருவதாலும் கணிசமான முதியவர்கள் திடீரென வேலையை விட்டு வெளியேறியதனாலும் பல நிறுவனங்களின் அதிகாரிகள் பல்வேறு மோசமான சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டாபய ஆட்சிக் காலத்தில் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 இலிருந்து 65 ஆக நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய நிர்வாகத்தால் அந்த முடிவு இரத்து செய்யப்பட்டது.

அதற்கமைய, இந்த ஆண்டு சுமார் 30,000 அரச ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளதாகவும், அதிக எண்ணிக்கையிலான அரச அதிகாரிகள் ஒரே நேரத்தில் ஓய்வு பெற்ற ஆண்டாக இது திகழ்வதாகவும் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# வடக்கு ரயில் சேவை மார்க்கத்தின் சீரமைப்பு அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 31

அனுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றின் மூலம் ஜனவரி 5ஆம் திகதி முதல் குறித்த புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# கோவிட் நிலைமைகள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 31

இலங்கையில் கோவிட் தொற்று நிலைமை குறித்து ஆராய்ந்து வருவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் மீண்டும் கோவிட் தொற்று தொடர்பான கட்டுப்பாடுகள் கட்டாயமாகிறதா என்பது குறித்தும் அவர் தகவல் வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

சீனாவில் புதிதாக கோவிட் பெருந்தொற்று பரவ ஆரம்பித்துள்ளதை தொடர்ந்து இலங்கையில் கோவிட் தொற்று நிலைமை குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

எனினும் புதிய கட்டுப்பாடுகள் வழிமுறைகள் குறித்து விசேட சுற்றறிக்கை எதனையும் வெளியிடவில்லை என்ற போதும் முகக் கவசங்களை அணியவேண்டும் என்ற செய்தியை தொடர்ச்சியாக தெரிவிக்கவேண்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் சில விடயங்களை பின்பற்ற வேண்டும். ஆனால் அவை கட்டாயம் இல்லை. பாதிப்புகள் மற்றும் பலாபலன்கள் குறித்து ஆராய்ந்த பின்னரே புதிய நடை முறைகளை முன்னெடுக்க வேண்டும்.

புதிய நடைமுறைகளை பின்பற்றுவதா இல்லையா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். நாங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையும் சமூகம் மற்றும் அரசாங்கத்தின் மீது தாக்கத்தை செலுத்தும்.

எந்த கடுமையான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முன்னர் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு மற்றும் பலன்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்-என்றார். (அ)

# சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரசி வவுனியா மாணவருக்கு கிடைக்கவில்லை

வவுனியா, டிசெ. 31

சீன அரசாங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 58900 கிலோ அரிசி வவுனியாவில் நீண்ட நாளாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளபோதும் இதுவரை விநியோகிக்கப்படவில்லை என பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து பாடசாலை செல்லும் தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களின் பசியை போக்கும் முகமாக சீன அரசாங்கத்தால் ஒரு மாணவருக்கு 10 கிலோ வீதம் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. குறித்த அரிசியானது வடமாகாணத்தில் வடமாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மேற்பார்வையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு 4 இலட்சத்து 15450 கிலோ அரிசியும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒரு இலசத்து 13720 கிலோ அரிசியும், மன்னார் மாவட்டத்திற்கு ஒரு இலட்சத்து 7160 கிலோ அரிசியும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒரு இலசத்து 5370 கிலோ அரிசியும், வவுனியா மாவட்டத்திற்கு ஒரு இலட்சத்து 62570 கிலோ அரியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் குறித்த அரிசி அந்தந்த மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாணவர்களுக்கு விநியோகிப்பட்டு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் குறித்த அரிசி இன்னும் விநியோகிக்கப்படவில்லை.

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஓமந்தையில் உள்ள களஞ்சிய சாலையில் குறித்த அரிசியில் ஒரு இலட்சத்து 58900 கிலோ கொண்டு வரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு ஒரு மாதம் நெருக்கும் நிலையில் அவ் அரிசி மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

புது வருடத்திற்குக்கூட குறித்த அரிசி கிடைக்கவில்லை எனவும், அவை களஞ்சியப்படுத்தி நீண்ட காலம் வைத்திருந்தால் பழுதடைந்து விடும் எனவும் பெற்றோர் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பெற்றோர் கோரியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சு.ஜெகசோதிநாதனிடம் கேட்டபோது,

மாணவர்களுக்கான அரிசி விநியோகம் வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. எமது மாவட்டத்தில் அதனை வழங்குமாறு எம்மிடம் தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கான அரிசி எமது சங்கத்தின் ஓமந்தை களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த அரிசி விநியோகத்திற்கான மாணவர்களது பெயர் பட்டியில் வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் இருந்து பாடசாலை விடுமுறை விடுவதற்கு முதல் நாளே எமக்கு கிடைத்தமையால் எம்மால் வழங்க முடியவில்லை. பாடசாலை ஆரம்பித்ததும் அதனை வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் இ.அ.ஆனந்தராஜாவிடம் கேட்டபோது,

வடக்கில் கொண்டு வரப்பட்ட அரிசியில் ஏனைய மாவட்டங்களில் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது. வவுனியாவில் இதுவரை விநியோகிக்கவில்லை. எமக்கு பெயர்ப் பட்டியல் முன்னரே கிடைத்திருந்தது. ஆனாலும் சீரற்ற காலநிலை காரணமாகவும், போக்குவரத்து பிரச்னை காரணமாகவும் பாடசாலை ரீதியாக கொண்டு சென்று உடனடியாக வழங்க முடியவில்லை.

அதற்கான ஏற்பாடுகளை சீர்செய்த போது பாடசாலை விடுமுறை விட்டுள்ளது. அதனால் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் வவுனியாவில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக பாடசாலை ரீதியாக விநியோகம் இடம்பெறும் எனத் தெரிவித்தார். (அ)

## பதில்...

கணபதிப்பிள்ளை மகேசன் பதவி உயர்வு பெற்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளராக சென்றுள்ளார்.

இந்த நிலையில், புதிய அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்படும்வரை பதில் அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் கடமையாற்றுவார் என்று நேற்று பிரிவுபசார நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவேளை கணபதிப்பிள்ளை மகேசன் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (ஐ)

## புலிகளை...

ஆரம்பித்துள்ளது என்று த பெடரல் செய்தித்தளம் தெரிவித்துள்ளது.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழகம் மற்றும் இலங்கையில் வலுப்படுத்த பாகிஸ்தான் உளவு அமைப்பு முயல்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்குவதற்காக போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டனர் என்றுகூறி அண்மையில், திருச்சி சிறப்பு முகாமில் இருந்து சிங்களவர் - தமிழர் - முஸ்லிம்கள் என 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இவர்களுக்கும், பாகிஸ்தானின் போதைப்பொருள் முக்கியஸ்தர் ஹாஜி சலீமின் உதவியுடன் ஏற்கனவே பாகிஸ்தானில் இருந்து கேரளா - கொல்லம் கடற்பரப்பின் ஊடாக போதைப் பொருள் மற்றும் ஆயுதங்களை கடத்தி வந்ததாகக் கூறி கைது செய்யப்பட்டவர்களுக்கும் தொடர்புகள் இருக்கின்றன என்று தெரிய வந்தது.

இதன்மூலம் 13 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் மௌனிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, மேலோங்கச்செய்ய போதைப்பொருள் விற்பனையை பாகிஸ்தானிய புலனாய்வுச் சேவை ஊக்குவிப்பதாக இந்திய புலனாய்வுச்சேவை கருதுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான குஜராத், காஷ்மீர் மற்றும் பஞ்சாப் எல்லைகள் இந்திய இராணுவத்தில் அதிகளவில் கண்காணிக்கப்படுகிறது. இதனால், கடத்தல்காரர்கள், ஹெரோயின், மார்பின், ஹைட்ரோகோடோன், ஓபியம், நோர்கோ, கொன்டின், பெர்கோசெட், கோடீன் போன்ற போதைப்பொருள்களை, இலங்கையில் இருந்து விநியோகம் செய்ய தமிழ்நாடு கடற்கரை சிறந்த இடமாக இருக்கும் என்று இந்திய புலனாய்வுச்சேவை சந்தேகிக்கிறது.

இதற்கு மத்தியில் பெங்களூரில் கைது செய்யப்பட்ட ஒருவர், ஆயிரக்கணக்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் தமிழகத்திலும் இலங்கையிலும் இருக்கின்றனர் என்று கூறியுள்ளார். இந்தநிலையில் அவர்களுக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தொடர்புகள் இருக்கலாம் என்று இந்திய புலனாய்வுப்பிரிவு சந்தேகிக்கிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பேருக்கும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. எனவே அந்த கோணத்தில், விடுவிக்கப்பட்டவர்களுடன், தற்போது கைது செய்யப்பட்டுள்ளவர்களுக்கு தொடர்புகள் உள்ளனவா? என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிய வருகிறது.

இதற்கு அப்பால், இலங்கையின் கரையோரப் பகுதியில் சீனா போதுமான ஆதிக்கத்தை கொண்டுள்ளதாகவும், எனவே தென்னிந்தியாவிலும் விடுதலைப் புலிகளின் தளத்தை மேம்படுத்த சீனா உதவ விரும்புவதாகவும் கூறப்படும் விடயம் குறிததும் இந்திய புலனாய்வுப்பிரிவு விசார ணையை மேற்கொண்டு வருவதாக தெ பெடரல் செய்தித்தளம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## வரிகள்...

150 ரூபாய்க்கு விற்கப்பட்டது . ஆனால், தற்போது ஒரு பைக்கெற் ஐநூறு ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

வரி நீக்கப்பட்ட பின்னரும் உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படாதது தொடர்பில் வினவிய போது, வரிகள் நீக்கப்பட்ட பின்னரும் உற்பத்தியாளர்கள் பொருட்களின் விலையை குறைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை இல்லை என்று மகளிர் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே, இது தொடர்பாக விரைவான விசாரணை நடத்தி, விலை குறைக்கப்படாதது குறித்து உற்பத்தியாளர்களிடம் பேச்சு நடத்தி, மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## யாழ்.மாநகர...

அறியவருகிறது.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகர சபையில் அதிக உறுப்பினர்களை கொண்ட (16 உறுப்பினர்கள்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2018இல் ஆட்சியமைத்தது. முதல்வராக இ. ஆர்னல்ட் பதவி வகித்திருந்தார். 2020ஆம் ஆண்டு அவரின் இரண்டாவது வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது. இதையடுத்து அவர் பதவியிழந்தார். இதையடுத்து, தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் தெரிவான வி. மணிவண்ணன் ஈ. பி. டி. பி. கட்சியின் ஆதரவுடன் முதல்வராகக் கடந்த 2020 டிசெம்பர் மாதம் பதவியேற்றார்.

இவர் இரண்டாவதாக சமர்ப்பித்த வரவு - செலவு திட்டம் முதல் சமர்ப்பிப்பிலேயே - கடந்த 24 ஆம் திகதி தோல்வியை தழுவியது. இந்த நிலையில், 14 நாட்களுக்குள் அவர் வரவு - செலவு திட்டத்தின் இரண்டாவது சமர்ப்பிப்பை சபைக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். எனினும், அவர் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் - அதாவது டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்திருக்க வேண்டும். ஏனெனில், புதிய ஆண்டு தொடங்கினால் வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்க முடியாது என்ற சட்டவிதியே இதற்குக் காரணம். புதிய ஆண்டுக்குள் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்படாதுவிட்டால், ஒவ்வொரு விடயத்தையும் மாநகர முதல்வர் - சபையின் அனுமதியை அல்லது ஆளுநரின் (மாகாண சபை இல்லாமையால்) அனுமதியை பெற்றே செயல்பட நேரும்.

இந்நிலையிலேயே, யாழ். மாநகர சபையை சிக்கலுக்குள் தள்ளி - இன்று சனிக்கிழமை - டிசெம்பர் 31ஆம் திகதி முதல் மணிவண்ணன் தனது பதவியை துறந்துள்ளார்.

**சபை கலையாது**

இதனிடையே, இரண்டாவது முதல்வர் பதவியை துறந்ததால் யாழ். மாநகர சபை கலையும் என்று தகவல்கள் பரவி வருகின்றது. ஆனால், அது தவறான கருத்து என்று யாழ். மாநகர முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண சபையின் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவரை தொடர்பு கொண்டபோது, தோற்கடிக்கப்பட்டது வி. மணிவண்ணன் சமர்ப்பித்த இரண்டாவது வரவு - செலவு திட்டமே. அவர் இரு ஆண்டுகள் பதவி வகித்துவிட்டார். எனவே, முதல்வர் தெரிவே நடத்தப்பட வேண்டும். இவரே இரண்டாவது முதல்வராக கருதப்படுவார். அவர் சபைக்கு முன்வைக்கும் சமர்ப்பணங்கள் தோற்கடிக்கும்போது - பதவி துறக்கும் பட்சத்திலேயே சபை யும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும். உள்ளூராட்சி சட்ட ஏற்பாடு 66 பி-4 இதையே கூறுகிறது - என்று கூறினார். (ஐ-03)

# வல்வெட்டித்துறையில் தஞ்சமடைந்த நான்கு இந்திய மீனவர்களுக்கு மறியல்

வடமராட்சி, டிசெ. 31

படகு பழுதடைந்ததால் வல்வெட்டித்துறையில் தஞ்ச மடைந்த 4 இந்திய மீனவர்க ளையும் எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 4 இந்திய மீனவர்கள் கடந்த புதன்கிழமை நள்ளிரவு படகின் இயந்திர கோளாறு காரணமாக வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதியில் உள்ள கடற்கரையில் தஞ்சமடைந்தனர்.

தஞ்சமடைந்த இந்திய மீனவர்களை மீட்ட வல்வெட் டித்துறை பொலிஸார் பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போதே நீதிவான் நீதி மன்றம் நான்கு இந்திய மீனவர் களையும் 2023 ஜன.2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (ஐ-02)

### நிலக்கரி கொள்வனவில் மோசடி;

# உண்மையென்று நிரூபித்தால் அமைச்சர் பதவி விலக வேண்டும்!


கொழும்பு, டிசெ. 31

நிலக்கரி கொள்வனவு மோசடி தொடர்பில் நான் முன்வைத்த குற்றச்சாட்டு பொய் என்றால் தண்டனை ஏற்க தயார். குற்றச்சாட்டு உண்மையாயின் மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் கஞ்சன விஜயசேகர பதவி விலக வேண்டும் என மக்கள் பேரவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மக்கள் பேரவை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நிலக்கரி விலைமனு கோரல் தொடர்பில் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் நிலக்கரி கொள்வனவில் தாமதம் ஏற்பட்டு மின்னுற்பத்தி கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை



முற்றிலும் அடிப்படையற்றது.

நிலக்கரி விலைமனுக்கோரல் ஊடாக பாரிய நிதி மோசடி இடம்பெற இருந்தது,நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததை தொடர்ந்து மின்சாரத்துறை அமைச்சர் நிலக்கரி தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக் கோரலை கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி மீள ஏன் பெற்றுக் கொண்டார்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் அரச நிதி மோசடிகளுக்கு குறையேதும் இல்லை. நிலக்கரி கொள்வனவில் இடம் பெற்ற மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை குழு ஒன்றை நியமிக்குமாறு வலியுறுத்தியுள்ளேன்.

நிலக்கரி கொள்வனவு மோசடி தொடர்பில் நான் முன்வைத்த குற்றச்சாட்டு பொய் என்றால் தண்டனை ஏற்க தயார்,குற்றச்சாட்டு உண்மையாயின் மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் கஞ்சன விஜசேகர பதவி விலக வேண்டும் - என்றார்.

(ஐ)

## ஒத்திவைத்த...

பணியக சட்டமூலம் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள வளாகங்களை மீள பெறுவதற்கான சட்ட மூலங்களின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதமும் வாக்கெடுப்பும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)

## புதிய...

தமிழரசு கட்சியின் அரசியல் குழுவில் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. அரசியல் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் குழு உறுப்பினர்கள் சகலரும் தங்களுடைய கருத்துக்களை முன்வைத்தார்கள்.

இறுதி தீர்மானத்தை ஜனவரி 7 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மத்திய குழு கூட்டத்தில் கலந்துரையாடி எடுப்பதுடன், இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு கலந்துரையாடி இறுதி முடிவு எடுப்பதாகவுமே முடிவு செய்யப்பட்டது. எந்த சூழ்நிலையிலும் மற்றைய தமிழ் தேசிய கட்சிகளை தேர்தலில் கூட்டணியாக உள்வாங்குவதில்லை என்ற முடிவு மெய்நிகர் வழியில் நடத்தப்பட்ட அரசியல் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பத்து - பதினைந்து நிமிடங்களில் தனக்கு வேறு ஒரு கூட்டம் உள்ளதாகக் கூறி வேறு ஒரு கூட்டத்துக்கு சென்றுவிட்டார்.

இறுதிவரை அவர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளவில்லை. உண்மைக்கு புறம்பான ஓர் அறிக்கையை பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களுக்கு வேண்டுமென்றே தெரிவித்திருப்பது கவனயீனமும் கவலைக்குரியதும் ஆகும் என்பதை பொறுப்போடு கூறிக்கொள்கின்றேன்", என்றார். (ஐ)

## சாதனை...

நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது.

2023 புது வருடத்தை வரவேற்கும் முகமாக நடைபெறும் இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இந்த நிகழ்வில், டான் தொலைக்காட்சி குழுமம் ஒவ்வோர் ஆண்டும் வழங்கும் சாதனை தமிழன் விருது யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தரும் வரலாற்றுதுறை பேராசிரியருமான சி. பத்மநாதனுக்கு வழங்கப்படவுள்ளது. இலங்கையில் தமிழரின் வரலாற்று தொன்மையை ஆதாரபூர்வமான தகவல்களுடன் நிரூபித்தமையை கௌரவிக்கும் முகமாகவே இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது. (இந்த விடயம் தொடர்பான கட்டுரை பக்கம் - 9ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது)

இதேசமயத்தில், மட்டக்களப்பிலும் புதுவருடத்தை வரவேற்கும் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு நகரின் தனியார் பேருந்து நிலையத்தில் வாண வேடிக்கைகளுடன் நடைபெறவுள்ளது.

இந்த இரு நிகழ்வுகளையும் கண்டுகளிக்க அனைவரையும் வருகை தருமாறும் டான் தொலைக்காட்சி குழுமம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு Eelanadu

## தினேஷ் ஷாப்டரின் மரணம் 90 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, டிசெ. 31

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் இதுவரையில் 90 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் பல பிரிவுகளின் கீழ் விசாரணை இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தினேஷ் ஷாப்டர் மரணித்தமை தொடர்பில், மனித கொலை மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களுக்கான விசாரணை பிரிவும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

# சீன அரிசி தொடர்பில் பொய்யான தகவல்கள்

## பிரதித் தூதுவர் ஹூ வெய் கவலை

கொழும்பு, டிசெ. 31

சீன நாட்டினால் வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் ஒரு சிலரால் வதந்தி மற்றும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன என இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் ஹூ வெய் கவலை தெரிவித்தார்.

சீன அரசின் நிவாரண அரிசி தொடர்பாக சமூக வலைத்தளங்களில் எழுப்பப்படும் விமர்சனங்கள் தொடர்பாக இலங்கைக்கான சீன பிரதித் தூதுவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோதே இதனை கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன நாட்டினால் வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் ஒரு சிலரால் வதந்தி மற்றும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பில் ஊடகங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

நான் உட்பட சீன மக்கள் உணவுக்கு பயன்படுத்தும் அரிசியையே இங்கு வழங்கினோம். அந்த அரிசியை ஸ்ரிக்கி றைஸ் என்று சொல்வார்கள்.

அதனை சமைப்பதற்கான வழிமுறை என்பது சற்று வித்தியாசமானது - என்றார். (அ)

# கடலட்டை பண்ணை வேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 31

கடல் அட்டைப் பண்ணைகள் வேண்டுமென கோரி நேற்று வெள்ளிக்கிழமை யாழ். கோட்டைப் பகுதியில் இருந்து யாழ். பஸ் தரிப்பு நிலையம் வரை பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியில் ஈடுபட்டவர்களால் கடற்தொழில் அமைச்சுக்கு மகஜரும் கையளிக்கப்பட்டது.

பேரணிகள் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கடற்தொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அட்டைப் பண்ணைகள் பெரிதும் உதவுகின்றன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நாட்டுக்கும் மக்களுக்கும் அன்னிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் ஒரு தொழிலாக அட்டைப் பண்ணை காணப்படுகின்றது.

சிலர் தமது குறுகிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கடல் தொழிலும் அட்டைப் பண்ணையும் செய்யாதவர்கள் எதிர்ப்பு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் முறையான அனுமதிகளை உரிய திணைக்களங்கள் ஊடாக பெற்றே அட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளோம்.

அட்டைப் பண்ணைகள் வேண்டுமென பலர் விண்ணப்பித்துள்ள நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த மக்களுக்கு பண்ணைகளைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் - என்றனர். (அ)

## பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல் இரண்டு இளைஞர்கள் கைதாகினர்

கொழும்பு, டிசெ. 31

ஹோட்டலுக்குச் செல்லும் வழியைக் கூறவில்லை என்பதற்காக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கல்கிஸை தலைமையகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

காயமடைந்த பொலிஸ் அதிகாரி களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி தனது நண்பரைச் சந்தித்து இரவு உணவு உண்டுவிட்டு பஸ்ஸில் ஏற கல்கிஸைக்கு வந்து கொண்டிருந்தபோது காரில் வந்த இரு இளைஞர்கள் ஹோட்டலின் பெயரையும் வழியையும் கேட்டுள்ளனர்.

இருப்பினும் பொலிஸ் உயர் அதிகாரி பதில் கூறாமல் முன்னே சென்று கொண்டிருந்தபோது இரு இளைஞர்களும் காரில் இருந்து இறங்கி அவரைத் தாக்கியதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

## நாயை புணர்ந்ததாக கூறப்படும் விவகாரம்:

## 150 கோடி ரூபாய் நட்டஈடாக கோருகிறார் ஆஷு மாரசிங்க!

கொழும்பு, டிசெ. 31

வளர்ப்பு நாயை புணர்ந்ததாக தன்மீது போலி குற்றச்சாட்டுகளை சுமத்தினர் என்று கூறி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் ஆதர்ஷா கரதனா ஆகியோரிடமிருந்து 150 கோடி ரூபாய் நட்டஈட்டை கோரி ஆஷு மாரசிங்க தனது வழக்கறிஞர் மூலம் அறிவித்தல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆஷு மாரசிங்க தனது வளர்ப்பு நாயை வன்புணர்வுக்கு உள்ளாக்கினார் என்று அவரின் காதலி என்று கூறப்படும் ஆதர்ஷா கரதனா சமர்ப்பித்த காணொலிகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர அண்மையில் வெளியிட்டார்.

இந்நிலையில், இருவரும் வெளியிட்ட காணொலி மற்றும் படங்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை என்று ஆஷு மாரசிங்க.

தன்மீது தேவையற்ற எண்ணம் ஒன்றை மக்களுக்கு ஏற்படுத்தவும், மக்களை தவறாக வழிக்கு கொண்டு செல்லும் வகையிலும் இந்த இருவரும் செயற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஹிருணிகா பிரேமசந்திரவிடம் 50 கோடி ரூபாயும், ஆதர்ஷா கரதனாவிடம் 100 கோடி ரூபாயும் நட்டஈடாக கோரியுள்ளார். (ஐ)

# தமிழ்க் கட்சிகள் இணைவு அர்த்தமுள்ளதாகவேண்டும்

## சந்திரகுமார் வலியுறுத்து

வவுனியா, டிசெ. 31

கட்சிகளின் இணைவு என்பது முக்கியமல்ல. அது ஒரு அர்த்தபூர்வமாக இருக்க வேண்டும். தமிழ் கட்சிகளுக்குள் நான் பெரிய கட்சி நீ பெரிய கட்சி என்ற நிலைப்பாடு மாறும் வரை ஒற்றுமையும் இல்லை. தமிழ் மக்களுக்கு விடுதலையும் இல்லை சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் திறப்பு விழாவின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நண்பர் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் கோரிக்கை ஒன்றை முன் வைத்தார். ஏன் சமத்துவக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணையக்கூடாது என்று. நாங்கள் இணையமாட்டோம் என்று எமது கதவுகளை இழுத்து மூடிவிடவில்லை. ஆனால் முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும் அவ்வாறு இருக்கும்போதே இணைவும் அர்த்தபூர்வமாக காணப்படும். அதுவே தமிழ் மக்களுக்கு நன்மையினையும் பெற்றுக்கொடுக்கும்.

நாட்டில் இனங்களுக்கிடையேயும், இனத்திற்குள்ளும் சமத்துவம் இன்மையே எமது கட்சியின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்தது. எங்கள் கட்சியில் அதிகளவான பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். ஆனால் இங்கு மிக கவலையோடு ஒரு விடயத்தை கூறுகின்றேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் புலிகளின் அமைப்பில் அனைத்து துறைகளிலும் மகளீர் அமைப்புக்களை உருவாக்கி பெண்களின் சமத்துவத்தை செயல்வடிவில் காட்டியவர்.




ஆனால் அவரால் உருவாக்கப்பட்ட கட்சி என்று சொல்லிக்கொள்ளும் தமிழரசுக் கட்சியை சேர்ந்த சிலர் கிளிநொச்சியில் சமத்துவக் கட்சியின் பெண் வேட்பாளர்களை நோக்கி கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மிக மிக கேவலமாக அவதூறுகளை செய்தார்கள். சபையில் பேசமுடியாத வார்த்தைகளை பயன்படுத்தினார்கள். பெண்களுக்கு சமத்துவத்தை வழங்கிய தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சியை சேர்ந்தவர்களா இவர்கள் என்று மக்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் காணப்பட்டன.

இன்று உள்ள பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராட்டக் காலங்களில் ஒரு துளி வியர்வை சிந்தாதவர்கள்.

இவர்கள்தான் அன்று வியர்வை சிந்தியவர்களுக்கு, ஆயுதம் ஏந்தி போராடியவர்களுக் கு துரோகிகள் என்று பட்டம் வழங்குகின்றவர்களாககாணப்படுகின்றனர். துரோகி பட்டம் வழங்குவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை உள்ளது. இன்று ஆயுதம் ஏந்தி போராடியவர்கள் துரோகிகள் என்றால் அவர்களை ஆதரித்த மக்களும் துரோகிகளா? -என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.